மலர்-4 இதழ்-90 மே 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

தமிழகத்திற்கு வருமானத்தை வாரி வழங்கும் கோவில்கள்

ஆன்மிகமலர் mobile app

GET IT ON Google Play



இலவச e- book

www.aanmeegamalar.com
e- magazine

## 99 சதவீதம்தான் ஜோதிடம் பலிக்கும்




# சுவஸ்திக் கிணறு வியக்க வைக்கும் முன்னோர் கட்டிடக்கலை

திருச்சியிலிருந்து துறையூர் செல்லும் சாலையில் 108 வைணவத் திருத்தலங்களின் ஒன்றான திருவெள்ளரை ஸ்ரீபுண்டரிகாட்ச பெருமாள் கோவில் அருகே அமைந்துள்ளது சுவஸ்திக கிணறு.

கி.பி. 800 ஆம் ஆண்டில் பல்லவ மன்னன் தந்தி வர்மன் ஆட்சிக் காலத்தில் சுவஸ்திக வடிவில் இக்கிணறு வெட்டப்பட்டது.

தந்தி வருமனின் பட்டப் பெயரின் ஒன்றான மார்பிடுகு பெருங்கிணறு என பெயரிடப்பட்டிருந்தது என்றும் இங்குள்ள கல்வெட்டின் மூலம் அறியப்படுகிறது என தொல்லியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இக்கிணறு உள்ளது என்று வைத்த போர்டில் வாசித்தோம்.

மேலும் நாலு மூலை கேணி என்றும் இக்கிணற்றில் ஒவ்வொரு படிக்கட்டுகளிலும் குளிக்கும்போது எதிரில் இருக்கும் படிக்கட்டுகளில் குளிப்பவர்கள் தெரியாத அளவிற்கு கல்தூண்களால் ஆன மறைவு கற்களை கொண்டு அமைந்துள்ளது.

மாமியார் மருமகள் குளம் என்று இக்குளத்திற்கு இன்னொரு பெயரும் உண்டு, இப்பெயர் வரக்காரணம் மிகவும் சுவாரஸ்யமாகும்.

மாமியார் குளித்தால் மருமகளுக்கு தெரியாது, மருமகள் குளித்தால் மாமியாருக்கு தெரியாது என்பதால் இக்குளத்திற்கு மாமியார்மருமகள் குளம் என்று பெயர் உருவானதாக பெற்றதாக கிராம மக்களால் காலம் காலமாக அழைக்கபட்டு வருகிறது.




# மரணம்

ஐயா, என் கணவர் இறந்துவிட்டார், என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை, என் துயரத்தை நீங்கள்தான் நீக்க வேண்டும்...

ஒரு பெண்மணி ஜே கிருஷ்ணமூர்த்தியிடம் கதறியபடி கூறுகிறார்.

அம்மா, நீங்கள் எந்தக் கணவனுக்காக அழுகிறீர்கள், சிறிய வயதில் தாயின் அரவணைப்பில் வளர்ந்த கணவனையா, பள்ளி, கல்லூ ரிக்கு சென்ற அந்த கணவனையா, காதல், திருமணம், கணவன், பின் குழந்தைகள் என வாழ்ந்த கணவரையா, நீங்கள் இதில் யாரை குறிப்பிடு கிறீர்கள் என்றார்.

இந்த கேள்வியை கேட்டதும் அந்த பெண்மணி ஆறுதல் அடைகிறார், மரணம் என்பது ஒரு பரிமாணத்தில் இருந்து மற்ற பரிமாணத்துக்கு செல் வது, அதாவது காய்ந்து போன இலை எப்படி எந்தவித மறுப்புமின்றி தரையில் விழுகிறதோ அதுபோலத்தான் மரணம் என்பதை உணர்ந்தார். அந்தப்பெண்.

www.aanmeegamalar.com







வைரஸ் பிரச்சனையால் இன்று பல துன்பங்களை அனுபவித்து வரும் இந்த வேளையில், துளசி, நொச்சி, வேப்ப இலை, மஞ்சள், தழுதாலை, கற்பூரவல்லி, ஆடாதொடை இலைகள் போட்டு கொதிக்க வைத்த நீரில், ஆவி பிடித்து வந்தால் மிகுந்த பலன்கள் கிடைக்கும்.

இப்படிச் செய்யும் போது, மூக்கின் வழியே, சுவாச மண்டலத்திற்கு உள்ளே நுழையும் நிலையில் உள்ள கிருமிகளின் செயல்திறன் குறைத்து விடும்.

வாரத்திற்கு இரண்டு முறை அல்லது வெளியில் சென்று வரும் சமயங்களில் இதுபோன்று ஆவிபிடிப்பதை செய்துவந்தால் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.

# இயற்கை இலையில் ஆவிபிடியுங்கள்

# ‘அரோஹரா’ தோன்றிய வரலாறு

‘அரோஹரா’ அல்லது ‘அரோகரா’ என்பது ‘அர ஹரோ ஹரா’ என்ற சொற்களின் சுருக்கம். இதற்கான பொருள், ‘இறைவனே, துன்பங்களை நீக்கி எங்களுக்கு நற்கதியை அருள்வாயாக’ என்பதாகும்.

முன்பு, சைவ சமயத்தினர் இதனைச் சொல்வது வழக்கமாக இருந்தது.

திருஞானசம்பந்தர் ஒருமுறை பல்லக்கில் அமர்ந்து பயணம் செய்தபோது, அவரைச் சுமந்துகொண்டு வந்தவர்கள் ‘ஏலே லோ ஏலே லோ’ என்று களைப்பைக் குறைப்பதற்காக பாடிக்கொண்டு வந்தனர்.

இதைச் செவிமடுத்த திருஞானசம்பந்தர், பொருளற்ற ஒன்றைச் சொல்வதைவிட பொருளோடு ஒன்றைச் சொன்னால் நல்லது என்று, ‘அர ஹரோ ஹரா’ என்பதைக் கற்றுக்கொடுத்தார். அதன் பிறகு ‘அர ஹரோ ஹரா’ என்று சொல்வது வழக்கமாயிற்று.

இன்னும் சொல்லப் போனால் அரோகரா என்பதை, அர+ஓ+ஹரா என பிரிக்கலாம். அதாவது அரண், ஹரண் இரண்டுமே சிவனின் பெயரை குறிப்பதாகும் இருந்தாலும் அவர் புதல்வர் மீது கொண்டுள்ள பற்றற்ற ஆசையினால் முருகனடியார்கள், முருகனை வணக்கும்போது அரோகரா என்கின்றனர்.

காலப்போக்கில் சைவர்கள் இதனைச் சொல்லும் பழக்கம் குறைந்தது. ஆனால், கௌமாரர்கள் (முருகனடியார்கள்) ‘வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா’ என்றுச் சொல்லி வந்ததால் இச்சொற்கள் முருகனோடு இணைந்துவிட்டன! பக்தர்கள் ‘வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா’ என்றுச் சொல்வது’ வெற்றி வேலைக் கொண்ட முருகனே, எங்கள் வாழ்க்கையில் இருக்கும் துன்பங்களைப் போக்கி, நற்கதியை அருள்வாயாக’ என்று உரிமையோடு முறையிடுவதாகும்.



www.aanmeegamalar.com

# ஒரே கோயில் இரண்டு கருவறைகள் இரண்டு சண்டிகேஸ்வரர்



## போக சக்தியாக தாயார்

தேவர்களையும், முனிவர்களையும் துன்பப்படுத்தி வந்த சூரபத்மனை திருச்செந்தூரில் முருகப் பெருமான் சம்ஹாரம் செய்த பிறகு, அவனது மகனான இரண்யாசுரன், முருகனுக்கு பயந்து தரங்கம்பாடி கடலுக்குள் ஒளிந்தான். சிவபக்தனான அவனையும், பராசக்தியின் அருளால் முருகன் சம்ஹாரம் செய்தார். அதனால் உண்டான பாவத்தை போக்க, நாகை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் தில்லையாடியிலிருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ள திருவிடைக்கழி சுப்ரமண்ய சுவாமி கோவிலில் உள்ள குராமரத்தின் அடியில் தவமிருந்தார். இதனால் 'திருக்குராவடி' என இத்தலத்திற்கு பெயர் வந்தது.

ஒரு முகம், இரண்டு கரங்களுடன், சுமார் ஐந்தடி உயரத்தில், நின்ற கோலத்தில் அருள் கிறார் முருகன். பாதங்களில் வீரக் கழல், வலது காலில் பூண் (ஓர் ஆபரணம்), மார்பில் வாகுவலயம், முகமோ சந்திர பிம்பம் சூரிய பிரகாசம். வலது கரம் அபய முத்திரை காட்ட, இடது கரத்தை இடுப்பில் வைத்தவாறு திகழும் முருகனின் இந்தத் திருக்கோலத்தை. ‘சுப்ரமண்யன்’ என்று ஆகமங்களும், சிற்ப நூல் களும் குறிப்பிடுகின்றன.

கருவறைக்குள் மற்றொரு கருவறையாக முருகனும் சிவனும் காட்சியளிக்கும் அற்புதமான அமைப்பை, திருவிடைக்கழி திருக்கோயிலில் மட்டுமே காண இயலும்.

சுப்ரமண்யருக்கு முன்புறம் சிறிய ஸ்படிக லிங்கமும், பின்புறம் கருவறையில் பாபநாச லிங்கமும் திகழ்கின்றன. இருமூர்த்தங்களுக்கும் தனித்தனி விமானங்கள். முருகனுடைய விமானம் சற்று உயரமாகவும், இறைவனுடைய விமானம் சற்று தாழவும் உள்ளது.

இத்திருக்கோயிலில் பாப நாசப் பெருமானுக்கு உரிய அம்பிகை சந்நிதி இல்லை; ஆனால்,





மூலஸ்தானத்தில் போக சக்தி அம்மன் உண்டு.

அம்பாள் தரங்கம்பாடிக்குச் சென்றதால் இக் கோயிலில் அம்பாள் சந்நிதி இல்லை.

ஆதலால் சூர சம்ஹாரத்தின் போது முருகர் திருவிடைக்கழியிலிருந்து தரங்கம்பாடி எழுந்தருளி அன்னை அகிலாண்டேஸ்வரி யிடம் வேல் வாங்கி தரங்கம்பாடி கடற்கரையில் சூர சம்ஹாரம் நடைபெறுகிறது.

சண்டேசுவர மூர்த்தங்களும் இரண்டு உள் ளன. சிவச்சண்டேசுவரர், குகச்ண்டேசுவரர் என்று (இறைவனுக்கும் முருகனுக்கும் உரியவர் களாக) பெயர்கள் சொல்லப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தல விருட்சம் சிறப்புப் பெற்ற தலங்கள் இரண்டு. ஒன்று காஞ்சிமாவடி. மற்றது திருவிடைக்கழி குராவடி. இந்த “குரா”மரத்தடியிற்றான் “ராகு”முருகனைப் பூசித்து வரம் பெற்றதால் இது “ராகுதோசம் நீக்கும் ஸ்தலம் ” எனப்படுகிறது. இந்த “குரா” மரத்தடி நிழலில் இன்றும் முருகன் விரும்பி உலாவுவதாக ஸ்தலபுராணம் சிறப்பிக்கின்றது. “ராகு” என்பதை திருப்பி நோக்கினால் “குரா” எனவரும்.

"சிறக்கு மாதவர் முனிவர் மகபதி இருக்கு வேதனும் இமயவர் பரவிய திருக்குராவடி நிழல்தனில் உலவிய பெருமாளே ” என அருண கிரிநாதர் தன் திருப்புகழில் “குரா” மரத்தையும் ( ஸ்தல விருட்சம் ) குராமரத்தடிக் குமரனையும் போற்றித் துதி செய்கின்றார்.






குரா மரத்தருகில் ‘பத்ர லிங்கம்’ எனும் பலிபீடம் உள்ளது. முருகப்பெருமான் குரா மரத்தின் கீழிருந்து தவம் புரிந்ததை உணர்த் தும் வகையில், அர்த்தஜாமத்தில் இந்தப் பலிபீடத்துக்கு முதலில் பூஜை செய்த பிறகே மூலவருக்கு பூஜை செய்வது வழக்கம்.

தல மரம் அடுத்து தனிச்சந்நிதியாக திருக் காமேசுவரர் சிவலிங்க வடிவில் தரிசனம் தரு கிறார்.

இது திருவிசைப்பா பாடப்பெற்ற தலம், அதைப் பாடிய சேந்தனார் முக்தி பெற்ற தலம், மேலும் முசுகுந்தன், வசிட்டர், ஆகியோர் வழிபட்ட பதி.

**நிச்சயதார்த்த தலம்:** முருகனை மணம் செய்ய விரும்பிய தெய்வானை, தவம் செய்த தலம் இது. இங்கு இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது. தெய்வானையின் முகம், வெட்கத்தால் சற்று சாய்ந்தது போல் உள்ளது.

முதல்படைவீடான திருப்பரங்குன்றம் செல்ல தெய்வானை விடை பெற்றதாலும், முருகனுக்கு இரண்யாசுரனைக் கொன்ற பழி கழிந்ததாலும் இத்தலம் 'விடைக்கழி' எனப்படுகிறது.

இத்தலத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் +91 4364 204 888


ஆன்மிகமலர் மெயில் புக்

# கடவுள் எங்கும் இருக்கிறார்

## எல்லா செயலையும் கண்காணிக்கிறார்

பகவத் கீதை என்பது கிருஷ்ணனின் அறிவுரை. உத்தவ கீதை என்பது அவன் செயல்களுக்கான தெளிவுரை...

கீதையில் நான் சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டேன் இனி பகுத்தாய்ந்து முடிவு செய் என்றுதான் சொல்கிறான் கிருஷ்ணன். இறைவனே சொன்னாலும் பகுத்தாய்ந்து உன் மனம் நான் சொல்வதை ஏற்றால் மட்டுமே செய் ... ஏற்கா விட்டால் உன் விருப்பம் போல் செய் என்கிறார் கிருஷ்ணர்.

இந்த பண்புகள் வேறு எந்த மதத்திலும் பார்க்க முடியாத ஒன்று. தனி மனித சுதந்திரத்தை கடவுளே மதிக்கும் கலாச் சாரம் இது.

இறைவனை சந்தேகிக்கவே கூடாது என்கிற பல அந்நிய மதங்கள் இன்று நம் நாட்டில் உண்டு. ஆனால் சனாதன சமயத்தில் அவ்வாறு இல்லை... சிவனையே உரிமையோடு கடிந்துக் கொள்ளும் அடியார்களும் இந்த மண்ணில் வாழ்ந்து இறைநிலையை அடைந்துள்ளனர்.

நான் பரமாத்மா என்னையே நீ கேள்வி கேட்கிறாயா என்று இந்து கடவுள்கள் அகங்காரம் கொள்ளவில்லை. கோபப் படவில்லை.

எதார்த்தமான வாழ்க்கையில் தேவையான கேள்வி பதிலை இந்த உத்தவ கீதையின் மூலம் எளிதாக தெரிந்து கொள்ள லாம்.

உத்தவ கீதையில் நண்பனைப் பற்றி கிருஷ்ணரிடம் உத்த வர் கேட்கும்போது

"கண்ணா! முதலில் எனக்கு ஒரு விளக்கம் வேண்டும். உண்மையான நண்பன் யார்?"

"நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பு இல்லாமலேயே வந்து உதவி செய்பவனே உற்ற நண்பன்" என்றான் கண்ணன்..

கிருஷ்ணா! நீ பாண்டவர்களின் உற்ற நண்பன். உன்னை அவர்கள் ஆபத்பாந்தவனாக, பரிபூரணமாக நம்பினார்கள்.




நடப்பதை மட்டுமல்ல; நடக்கப் போவதையும் நன்கறிந்த ஞானியான நீ... 'உற்ற நண்பன் யார்' என்பதற்கு நீ அளித்த விளக்கத்தின்படி... முன்னதாகவே சென்று, 'தருமா! வேண் டாம் இந்தச் சூதாட்டம்' என்று தடுத்திருக்கலாம் அல்லவா? ஏன் அப்படிச் செய்யவில்லை?

விளையாட ஆரம்பித்ததும், தருமன் பக்கம்அதிர்ஷ்டம் இருக்கும்படி செய்து, வஞ்சகர்களுக்கு நீதி புகட்டியிருக்க லாம். அதையும் நீ செய்யவில்லை. தருமன் செல்வத்தை இழந்தான்; நாட்டை இழந்தான்; தன்னையும் இழந்தான். சூதாடியதற்குத் தண்டனையாக, அதோடு அவனை விட்டி ருக்கலாம். தம்பிகளை அவன் பணயம் வைத்த போதாவது, நீ சபைக்குள் நுழைந்து தடுத்திருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை. 'திரௌபதி அதிர்ஷ்டம் மிக்கவள். அவளைப் பணயம் வைத்து ஆடு. இழந்தது அனைத்தையும் திருப்பித் தருகிறேன்' என்று சவால் விட்டான் துரியோதனன்.

அப்போதாவது, உனது தெய்வீக சக்தியால், அந்தப் பொய்யான பகடைக் காய்கள் தருமனுக்குச் சாதகமாக விழும்படி செய்திருக்கலாம். அதையும் செய்யவில்லை.

மாறாக, திரௌபதியின் துகிலை உரித்து, அவளின் மானம் பறிபோகும் நிலை ஏற்பட்ட போதுதான் சென்று, 'துகில் தந்தேன், திரௌபதி மானம் காத்தேன்' என்று மார்தட்டிக் கொண்டாய். மாற்றான் ஒருவன், குலமகள் சிகையைப் பிடித்து இழுத்து வந்து, சூதர் சபையில் பலர் முன்னிலையில், அவள் ஆடையில் கை வைத்த பிறகு,

எஞ்சிய மானம் என்ன இருக்கிறது? எதனைக் காத்ததாக நீ பெருமைப்படுகிறாய்? ஆபத்தில் உதவுபவன்தானே ஆபத் பாந்தவன்? இந்த நிலையில் உதவாத நீயா ஆபத்பாந்தவன்? நீ செய்தது தருமமா?" என்று கண்ணீர் மல்கக் கேட்டார் உத்தவர்.

இது உத்தவரின் உள்ளக் குமுறல் மட்டுமன்று; மகாபாரதம் படித்துவிட்டு நாம் அனைவருமே கேட்கும் கேள்விகளே இவை. நமக்காக இவற்றை அன்றே கண்ணனிடம் கேட்டி ருக்கிறார் உத்தவர்...

உத்தவருக்கு கிருஷ்ணர் மிக அற்புதமாக கூறிய பதில்....

"துரியோதனனுக்கு சூதாடத் தெரியாது. ஆனால், பணயம் வைக்க அவனிடம் பணமும், ஏராளமான ஆஸ்தியும் இருந்தது. 'பணயம் நான் வைக்கிறேன். என் மாமா சகுனி, பகடையை உருட்டிச் சூதாடுவார்' என்றான் துரியோதனன். அது விவேகம்.

தருமனும் அதுபோலவே விவேகத்துடன் செயல்பட்டு, 'நானும் பணயம் வைக்கிறேன். ஆனால், என் சார்பாக என் மைத்துனன் ஸ்ரீகிருஷ்ணன் பகடைக்காயை உருட்டு வான்" என்று சொல்லியிருக்கலாமே? சகுனியும் நானும் சூதாடியிருந்தால், யார் ஜெயித்திருப்பார்கள்? நான் கேட்கும் எண்ணிக்கைகளைச் சகுனியால் பகடைக் காய்களில் போடத்தான் முடியுமா? அல்லது, அவன் கேட்கும் எண்ணிக் கைளை என்னால்தான் போட முடியாதா? போகட்டும்.

தருமன் என்னை ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ள மறந்துவிட்டான் என்பதையாவது மன்னித்து விடலாம். ஆனால், அவன் விவேக மில்லாமல் மற்றொரு மாபெரும் தவற்றையும் செய்தான்.

'ஐயோ... விதிவசத்தால் சூதாட ஒப்புக் கொண்டேனே! ஆனால், இந்த விஷயம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மட்டும் தெரியவே கூடாது. கடவுளே! அவன் மட்டும் சூதாட்ட மண்டபத்துக்கு வராமல் இருக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான்; என்னை மண்டபத்துக்குள் வர முடியாதவாறு, அவனே கட்டிப் போட்டுவிட்டான். நான் அங்கு வரக்கூடாதென என்னிடமே வேண்டிக்கொண்டான்.

யாராவது தனது பிரார்த்தனையால்என்னைக் கூப்பிட மாட்டார்களா என்று மண்டபத்துக்கு வெளியில் காத்துக்கொண்டு நின்றேன். பீமனையும், அர்ஜுனனையும், நகுல சகாதேவர்களையும் வைத்து இழந்தபோது, அவர்களும் துரியோதனனைத் திட்டிக் கொண்டும், தங்கள் கதியை எண்ணி நொந்து கொண்டும் இருந்தார்களே தவிர, என்னைக் கூப்பிட மறந்துவிட்டார்களே!

அண்ணன் ஆணையை நிறைவேற்ற துச்சாதனன் சென்று, திரௌபதியின் சிகையைப் பிடித்தபோது, அவளாவது என்னைக் கூப்பிட்டாளா? இல்லை.

அவளும் தனது பலத்தையே நம்பி, சபையில் வந்து, வாதங்கள் செய்து கொண்டிருந்தாளே ஒழிய, என்னைக் கூப்பிடவில்லை!



நல்லவேளை துச்சாதனன் துகிலுரித்த போதும் தனது பலத்தால் போராடாமல், 'ஹரி... ஹரி... அபயம் கிருஷ்ணா... அபயம்' எனக் குரல் கொடுத்தாள் பாஞ்சாலி. அவளுடைய மானத்தைக் காப்பாற்ற அப்போதுதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அழைத்ததும் சென்றேன். அவள் மானத்தைக் காக்க வழி செய்தேன். இந்தச் சம்பவத்தில் என் மீது என்ன தவறு?" என்று பதிலளித்தான் கண்ணன்.

கண்ணா! அசந்துவிட்டேன். ஆனால், ஏமாறவில்லை. உன்னை இன்னொரு கேள்வி கேட்கலாமா?" என்றார் உத்தவர். "கேள்" என்றான் கண்ணன்.

"அப்படியானால், கூப்பிட்டால்தான் நீ வருவாயா? நீயாக, நீதியை நிலை நாட்ட, ஆபத்துகளில் உன் அடியவர்களுக்கு உதவ வரமாட்டாயா?"

புன்னகைத்தான் கண்ணன்

"உத்தவா, மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படி அமைகிறது. நான் அதை நடத்துவதும் இல்லை; அதில் குறுக்கிடுவதும் இல்லை. நான் வெறும் 'சாட்சி பூதம்'. நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டு நிற்பவனே! அதுதான் தெய்வ தர்மம்" என்றான்.

"நன்றாயிருக்கிறது கிருஷ்ணா! அப்படியானால், நீ அருகில் நின்று, நாங்கள் செய்யும் தீமைகளையெல்லாம் பார்த்துக் கொண் டிருப்பாய். நாங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து பாவங்களைக் குவித்து, துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித்தானே?" என்றார் உத்தவர்.

"உத்தவரே! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நன்றாக உணர்ந்து பாருங்கள். நான் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை நீங்கள் உணரும் போது, உங்களால் தவறுகளையோ தீவினை களையோ நிச்சயமாகச் செய்ய முடியாது. அதை நீங்கள் மறந்து விடும்போதுதான், எனக்குத் தெரியாமல் செயல்களைச் செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்கள். பாதிப்புக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் நிகழ்வதும் அப்போதுதான்.

**எனக்குத் தெரியாமல் சூதாடலாம் என்று தருமன் நினைத்தானே, அதுதான் அவனது அஞ்ஞானம்.**

நான் சாட்சி பூதமாக எப்போதும், எல்லோருடனும் இருப்பவன் என்பதை தருமன் உணர்ந்திருந்தால், இந்த சூதாட்ட நிகழ்ச்சி வேறு விதமாக முடிந்திருக்கும் அல்லவா?" என்றான் ஸ்ரீகிருஷ்ணன். கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்பதை மறப்பதால்தான் இன்று உலகில் பாவங்கள் அதிகரிக்கின்றன.





# பூமிக்கு அடியில் கொண்டாடப்படும் சித்ரா பௌர்ணமி விழா

சித்திரா பௌர்ணமி தோறும் ஒவ்வொரு கோவிலிலும் ஒவ்வொரு வழிபாட்டு முறைகளை பின்பற்றுவது வழக்கம்.



அந்தவகையில் காஞ்சிபுரத்திலிருந்து தென்மேற்கே ஏழு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது, 'ஐயங் கார் குளம்' எனும் திருத்தலம். இங்குள்ள சஞ்சீவிராயர் சுவாமி கோயிலையொட்டி உள்ள பெரிய குளத்தின் அருகே நடவா விக் கிணறு என்ற சிறப்பு வாய்ந்த கிணறு உள்ளது. இந்தக் கிணற்றுக்குள் செல்ல படிக்கட் டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

படிக்கட்டுகள் வழியாகக் கீழே சென்றால் கருங்கல்லால் ஆன, அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த 16 கால் மண்டபத்தைக் காணலாம். இது ஓர் அபூர்வ கட்டிட அமைப்பு என்று ஆய்வாளர்கள் கூறுவர். எப்பொழுதும் நீர் நிறைந்து காணப்படும் இந்தப் பெரிய கிணற்றில் 'சித்ரா பௌர்ணமி அன்று ஒருநாள் மட்டும் உள்ளிருக்கும் நீரை முழுவதுமாக வெளியேற்றிவிடுவார்கள். அன்று மாலை பூமிக்கு அடியில் (கிணறு) அமைந்துள்ள 16 கால் மண்டபத்தில் காஞ்சி வரதராஜப் பெருமானை எழுந்தருளப் பண்ணுவார்கள். மறுநாள் மாலையில் ராமர், லட்சுமணன், சீதை ஆகியோரையும் அந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்கிறார்கள்.

இரண்டு நாட்கள் மட்டும் பூமிக்கு அடியில் கிணற்றுக்குள் சுவாமிகளைத் தரிசிக்கலாம். அதன்பின் கிணற்றில் நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து மண்டபத்தையும் கிணற்றையும் நிரப்பிவிடும். இந்த அபூர்வ காட்சியைச் சுற்று வட்டாரத்து மக்கள் வந்து தரிசித்து பெருமாளின் திருவருளைப் பெறுகின்றனர்.



# புறக்கணிப்பு

**யார் உன்னைப் புறக்கணித்தால் என்ன...???**

இந்தப் பிரபஞ்சம் எப்போதும் உன்னைத் தன் அன்பால், கருணையால் அரவணைத்துக் கொண்டுள்ளது சூரியனோ, சந்திரனோ என்றாவது உன்னைப் புறக்கணித்துத் தன் ஒளியை உனக்குத்தர மறுத்ததுண்டா..???

இயற்கை உன்னை ஒருபோதும் புறக்கணிப்பதில்லை உன் மீது எல்லையில்லா கருணை கொண்டிருக்கும் இயற்கையை மறந்து நீ மனிதர்களின் புறக்கணிப்பு குறித்து கவலை கொள்கிறாய் உண்மையில் புறக்கணிப்பு குறித்துச் சற்று ஆராய்ந்து பாரேன் அது மனதின் வேலை

உண்மையில் எத்தனையோ மனிதர்கள் உன்னைப் புறக்கணிப்பதுண்டு

நீயும் எத்தனையோ மனிதர்களைப் புறக்கணிப்பதுண்டு

எல்லாப் புறக்கணிப்புகளும் உனக்கு வலியைத் தருவதில்லை

சில மனிதர்களை மனம் கூழாங்கற்களாக நினைக்கிறது

சில மனிதர்களை மனம் விலையுயர்ந்த வைரம் போல் மிக உயர்வாக நினைக்கிறது

அவர்களின் அன்பிற்கும், அங்கீகாரத்திற்குமாய் ஏங்குகிறது

கூழாங்கற்களின் புறக்கணிப்பு வலியைத் தருவதில்லை

வைரத்தின் புறக்கணிப்பு வலியைத் தருகிறது

இது மனதின் "உயர்வுதாழ்வு மனப்பான்மை" என்ற குணத்தினால் விளைவது அந்த மனப்பான்மையினால் பிறரை உயர்வாகக் கருதும்போது உன்னை நீயே தாழ்வாகக் கருதுகிறாய்

பிறரைத் தாழ்வாகக் கருதும்போது உன்னை நீயே உயர்வாகக் கருதிக் கொள்கிறாய்

உன்னை நீ தாழ்வாகக் கருதும் தருணத்தில் வரும் புறக்கணிப்பு வலியைத் தருகிறது

உன்னை உயர்வாகக் கருதும் தருணத்தில் வரும் புறக்கணிப்பை வலியில்லாமல் உன்னால் கடந்து செல்ல முடிகிறது

இவையனைத்தும் உன் மனதின் கற்பனையான நிலைப்பாடுகளே யன்றி உண்மையில் இயற்கையில் அத்தகைய உயர்வுதாழ்வு ஏதுமில்லை

சிறு புல்லும், பெருஞ்சூரியனும் இயற்கையில் சமமாகவே உள்ளன

ஆக இப்போது உனக்குத் தேவை சமநோக்குப் பார்வை

தியானம் செய்

இயற்கையை நேசி

வலிகள் மறையும்

பாராட்டுக்காக

ஏங்கும் நேரத்தில்

நீ எத்தனை பேரை பாராட்ட மறந்திருக்கிறாய் என்று எண்ணி பார்

இது இயல்பே என எண்ணு வேகமாக சென்று கொண்டு இருக்கும் போது பார்க்கும் இயற்கை அழகை நின்று பார்க்க நேரம் இருப்பதில்லை அதற்காக இயற்கை தம் அழகை குறைத்து கொள்வதில்லை அது இயல்பாய் இருக்கிறது

அது போல் இயல்பாய் கடமையைச் செய்

– ஓஷோ







ஆச்சரியமான
உண்மை....
சந்தா இல்லை
நன்கொடை பெறுவதில்லை
விளம்பரங்கம் வாங்குவதில்லை
ஆனாலும் வெற்றிகரமாக
100வது இதழை நோக்கி
உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும் நம்பர் 1 ஆன்மிக
இ–புத்தகமாக வெளிவரும் ஒரே இதழ்
ஆன்மிகமலர்.காம் இணையதளம் மூலம் வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில்புத்தகம் மட்டுமே....
❖தனித்திருப்போம் ❖உலகை காப்போம் ❖கரோனாவை அழிப்போம்...

# உச்சவிருத்தி தானம்

இறைவனிடம் பக்தி கொண்டவர்களுக்கு அவர்களின் வயிறு நிறையவும், அவர்கள் குடும்பத்து உறுப்பினர்கள் வயிறு நிறையவேண்டும் என்பதால் மற்றவர்களால் கொடுக்கப்படும் ஒருவித தானத்தைத்தான் உச்சவிருத்தி என்று அழைப்பார்கள்.

இந்த உஞ்சவிருத்தி என்பது இருவகைப்படும்,

இறை சேவையும், இறை சிந்தனையுடன் பக்தியில் ஆழ்ந்திருக்கும் ஒருவர் அவரின் குடும்ப உறுப்பினர்கள் வயிறு நிறைய தேவையான தானியத்தை மற்றவர்களிடம் யாசகம் பெறாமல் வயல்வெளிகளில் அறுவடை முடிந்ததும் அங்கு சிதறிக்கிடக்கும் நெல்மணிகளை பொருகிவந்து அரிசியாக்கி அதை கொண்டு தங்கள் ஜீவனத்தை நடத்தும் முறை ஒன்று.

மற்றொன்று தலையில் வஸ்திரத்தால் தலைபாகை ஒன்றை கட்டிக்கொண்டு தோளில் ஒரு பித்தளை சொம்பை சிறு கயிறுகட்டி முன்பக்கம் லவாகமாக தொங்கவிட்டபடி ஒருகையில் சப்பலாகட்டையும் மறுகையில் தம்புராவும் மீட்டியபடி கிருஷ்ணா ராமா கோவிந்தா ஹரே ராம கிருஷ்ணா கோவிந்தா என்றபடி பகவத் நாமாவை வேறு சிந்தனையே இன்றி பஜனை செய்துகொண்டே தெருவில் செல்வது

அப்படி தெருவில் பகவத் நாமா பாடியபடியே செல்பவரை வீதியில் உள்ள இல்லங்களின் பெண்கள் தங்கள் இல்லத்தின் முன் நிறுத்தி அவரது பாதங்களைக்கழுவி இறைவனுக்கு சமமாக வணங்குவார்கள்.

அவர் தலையில் சுமந்து வரும் உஞ்சவிருத்தி பாத்திரத்தில் தங்களால் இயன்ற அளவு தானியம்/ அரிசிமணியை இடுவர்

அப்படி இடும் பெண்களை ஆசீர்வதித்து அவரது பாத்திரத்தில் இருந்து சிறிது தானியத்தை எடுத்து அந்த பெண்களின் பாத்திரத்தில் இடுவர் அதை அவர்கள் பகவத் பிரசாதமாக பெற்று செல்வர் அதை தங்கள் வீட்டு தானியத்தில் சேர்த்தால் அந்த தானியம் அட்சயம் அதாவது விருத்தி ஆகும் என நம்பினர்

இதுவே உஞ்சவிருத்தி என்னும் உன்னதமான முறை

உஞ்சவிருத்தி பொதுவாக சுத்த பிராமணராக வாழ்பவர்களே எடுப்பர், உஞ்சவிருத்தி பிராமணர்கள் வேறு எந்த தொழிலோ வைதீக ப்ரோகித கர்மங்களிலோ ஈடுபடமாட்டார்கள் யாரிடமும் எக்காரணம் கொண்டும் எதற்காகவும் பணம் பொருள் யாசிக்கமாட்டர்கள்.

தெருக்களில் எதேர்ச்சையாக நாமசங்கீர்த்தனம் செய்தவாறு செல்வர் தர்மம் செய்ய விருப்பட்டவர்கள் அவருக்கு அரிசி/ பொருள் இடுவர் அவ்வளவே தர்மம் கொடு என்றும் அவர்கள் யாரிடமும் கேட்கமாட்டார்கள் அவர்களது அந்த உஞ்சவிருத்தி செம்பு பாத்திரம் நிரம்பியதும் தங்கள் இல்லம் திரும்புவர் அதிகமாகவும் பெற மாட்டார்கள்

அரசி கிடைக்கவில்லை என்றால் அன்றைய நாள் முழுதும் குடும்பத்துடன் பட்டினி தான், நீர் தான் அன்றய ஆகாரம், அவர்களுக்கு தெரிந்து பகவானும் பகவான் நாம சங்கீர்தனமும் மட்டும்.

கர்நாடக இசையின் மும்மூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உஞ்சவிருத்தி செய்தேதான் தன் வாழ்வை பக்திபூர்வமாக நடத்தினார்

உஞ்சவிருத்தி பிராமணர்களில் வாழ்க்கை எப்படி இருக்கும் என்றால் அவர்கள் தினமும் பிரம்மமுகூர்த்தத்தில் தூக்கம் விழித்து நீராடி சந்தியாவந்தனம் அக்னிஹோத்ரம் முதலிய நித்யகர்மங்களை செய்வர் பின்னர் திருவாராதனம் முடித்து உஞ்சவிருத்தி செய்ய செல்வர்

மதியம் இல்லம் திரும்பி கிடைத்த பொருட்களை கொண்டு தளிகை செய்து இறைவனுக்கு கண்டருள செய்து பின் தாங்கள் அந்த பிராசாதத்தை சாப்பிடுவார்கள்.

ஏகாதசி தினம் என்றால் உஞ்சவிருத்தி செய்ய போகாமல் அன்றயதினம் முழு பட்டினி இருப்பார்.

அதிகமாக எப்பொருளையும் இல்லத்தில் சேர்க்க மாட்டார்கள்.

தங்களுக்கென சொந்தமாக ஒரு கையளவு இடம் கூட வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

தர்ம சிந்தனையுடன் தங்களுக்கு பொருள் தானியம் தர்மமாக தருபவர்கள் உள்ள ஊரில் தங்கள் ஆயுள் காலம் இருக்கும்வரை வசிப்பர்.

பணமோ பொருளோ யாரிடமும் யாசகம் பெற மாட்டார்.

அதாவது பொருள் பணம் ஈட்டும் நோக்குடன் மட்டும் எச்செயலையும் செய்ய மாட்டார்

தாங்கள் வாழும் வாழ்க்கை இறைவனுக்காக மட்டுமே வாழ்வார்.

அக்காலத்தில் ஒருசில பணக்காரர்கள் கூட தங்கள் பணத்தை தான தருமம் செய்துவிட்டு இப்படி உச்சவிருத்தி மூலம் இறைசிந்தனையுடன் வாழ்ந்து வந்ததாக கூறப்படுகிறது.




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com

# தமிழகத்திற்கு வருமானத்தை வாரி வழங்கும் கோவில்கள்

தமிழகத்தில் தற்போது கோவில்கள் மற்றும் இந்துக்கடவுள்களைப் பற்றி தேவையற்ற வாதங்களை ஒருசில மூடர்கள் அடிக்கடி எழுப்பி வருகின்றனர். இது முற்றிலும் வீண் விளம் பரங்களைத்தவிர வேறொன்றும் இல்லை.

மற்ற மதங்களைப்பற்றி வீண் வாதங்கள் செய்தால் ஒன்று வாதம் செய்பவர் உயிருக்கு ஆபத்து ஏற்படும், அல்லது அவர்களுக்கு பண வரவு குறைந்து விடும். ஆனால் இந்து மதத்தைப் பற்றி எந்த வாதத்தை எந்த மதத்துக்காரர்கள் வைத்தாலும் எந்தவித எதிர்ப்பும் ஏற்படாது.

இதனை தற்போது தங்கள் வருமானத்திற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்பவர் கள் கூத்தாடிகள் கூட்டத்தைச் சேர்ந்த ஒருசிலர்தான், இந்த ஒரு சிலர் பணத்திற்காக எதையும் செய்யும் கீழ்த்தரமானவர்கள், தாங்கள் ஆடி உடலை காட்டி நடித்த படங்கள் வெளிவரும் போது படத்திற்கு விளம் பரம் செய்வதற்கு இந்து மதத்தையும் இந்து கடவுள் களையும் பற்றி வீண் வாதங்களை முன்வைத்து விளம்பரம் தேடிக் கொள்வார்கள்.

இதுபோன்ற ஒரு கூத்தாடி குடும்பம் இந்துக் கோவில்களைப் பற்றி தேவையற்ற வாதத்தை வைத்துள்ளது.

அரசு வீணாக இந்து ஆலயங்களுக்கு செலவு செய்வதாக ஒசி விளம்பரத்திற்கு வாயை கொடுத்த அந்த கூத்தாடிக்கு நமது அன்பர்கள் வெளியிட்ட தகவல்களை முழுவதும் தருகிறோம்.

உண்மையில் தமிழக அரசாங்கம் கோயில் களில் கிடைக்கும் வருமாத்தை நம்பித்தான் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருவதாகவும், இந்துக்கோயில்களைத் தவிர மற்ற எந்த மதத்தைச் சேர்ந்தவர்களின் வழிபாட்டுதலங்களின் மூலம் வருமானம் கிடைப் பதில்லை என்றும் கூறப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களின் பராமரிப்புக்கு ஆண்டுதோறும் 4 கோடி முதல் 6 கோடி ரூபாய் வரை அரசு செலவழிக்கிறது.

மாறாக தமிழக கோயில்கள் அரசிற்கு ஆண்டு தோறும் ரூ. 3000 கோடி வருவாய் ஈட்டுகிறது..








## சிவனை இகழ்ந்தால் நாவை வெட்டிதள்ளும் சத்தி நாயனார்



சோழநாட்டில் வரிஞ்சையூர் பதியில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் சத்தி நாயனார். இவர் அதீத சிவத்தொண் டராக வாழ்ந்துவந்தார்.

இளமை முதலே சிவபெருமானின் மீது அளவற்ற பக்தியை கொண்டிருந்த சத்தி நாயனார் இளமையிலேயே சடைமுடியுடன் திகழந்தார். சிவனின் மீது பற்றுக்கொண்டு சிவனடியார்களுக்கு உதவுவதையே பெரும் பேறாக நினைத்து மகிழ்ந்து வாழ்ந்து வந்த சத்தி நாயனாருக்கு ஒரு குணம் உண்டு.

எங்கும் சிவம் எதிலும் சிவம் என்பதால் சிவனடியார்களைத் துன்புறுத்தி இகழ்ந்து பேசுவது பெருங்குற்றம். அப்படி செய்பவர்கள் நரகத்துக்குச் செல்வார்கள். என்பதை திண்ணமாக தனது கொள்கையாக எண்ணிவந்தார்.

விபூதி, ருத்திராட்சம், சடாமுடி கொண்ட சிவனடியார்கள் அல்லது அவர்களுக்கு தலைவனான சிவபெருமானை யாராவது பழித்து அல்லது இகழ்ந்து பேசினால் அவர்களது நாவை தம்மிடம் இருக்கும் குறட்டினால் பிடித்து அரிவார்.

அவர்கள் நாவினை அரியும் வலுவைக் கொண்டிருப்பதாலேயே அவர் சத்தியார் என்றழைக்க பெற்றார். சிவனின் மீது கொண்டிருந்த அன்பினாலேயே இத்தகைய அன்பை செய்து வந்து சிவனின் அன்பை பெற்றார். சிவனடியார்களை யாரும் இகழா வண்ணம் முழுக்க முழுக்க சிவனுக்காகவே வாழ்ந்துவந்தார். அளவற்ற தொண்டாற்றி சிவனது பாதத்தில் சரணடைந்தார். ஐப்பசி மாதம் பூரம் நட்சத்திரத்தன்று சிவாலயங்களில் இவருக்கு குருபூஜை கொண்டாடப்படுகிறது.

கோவில் பராமரிப்பு செலவு போக, மீதம் 2995 கோடி ரூபாய் அரசாங்கத்திடம் தான் உள்ளது !!

கோயில்கள் மூலம் பெறப்படும் வருமானத்தில் சுமார் 2500 கோடி ரூபாய் ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளின் கட்டு மானத்திற்கும், அதில் பணிபுரிபவர்களுக்கு சம் பளமாகவும் வழங்கப்பட்டு வருகிறது... இதுதவிர கோவில்களின் நேரடி கண்காணிப்பில் 54 பள்ளிகள் (CBSE உட்பட), கல்லூரிகள்செயல் படுகின்றன. 33 கருணை இல்லங்கள் பராமரிக் கப்பட்டு வருகின்றன...

இந்து சமய அறநிலையத் துறையின் கீழே உள்ள கோயில்களின் எண்ணிக்கை 44,121

இதுதவிர கிராம பூசாரிகளின் கட்டுபாட்டில் உள்ள கோயில்களின் எண்ணிக்கை 2,00,000

சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் கோயில்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளன.... இவற்றுள் பெரும்பாலானவை ஆயிரம் வருடங்களாக தமிழகத்தில் இருந்து வருகிறது... ஒரு சில கோயில்கள் கடந்த நூற்றாண்டில் கட்டப்பட்டன...

ஆனால் ஆண்டுதோறும் ஆயிரம் முதல் 3 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டக்கூடிய கோவில் சொத்துக்களை முழுமையாக அரசு வருமானமாகவே உள்ளது. திராவிட கட்சிகள் ஆட்சிக்காலத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் கோடி ரூபாய் ,கோயில்களின் மூலம் பெறப்பட்ட நிதியை கொண்டு தான் இத்தனை காலம் ஆட்சி நடத்தி வந்துள்ளது.

தமிழ் மன்னர்கள் தங்கள் காலத்தில் கட்டிய மைத்த கோவில்கள் தான் இன்றைய காலத்திலும் தமிழக மக்களுக்கு பயன் தருகிறது...

தமிழக கோயில்களின் கீழ் உள்ள நிலங்களின் சொத்துவிவரம்

சுமார் 7 லட்சம் ஏக்கர் நிலங்கள்..

இவைகளுள் ஐந்து லட்சத்திற்கும் மேலான நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளது... மீதியுள்ள இரண்டு லட்சம் ஏக்கர் குத்தகை பணம் தான் தமிழக அரசுக்கு வருகிறது... பெரும்

பாலான கோயில்களின் ஒரு ஏக்கர் குத்தகை நிலத்திற்கு ஆண்டுதோரும் 40 ரூபாய் மட்டுமே பெறப்படுகிறது..

பல லட்சம் கோடிகள் தமிழக அரசிற்கு வரக் கூடிய வருமானத்தை ஏதோ காரணத்திற்காக அரசாங்கம் கண்டுக்கொள்ளாமல் உள்ளது. அந்தப் பணத்தில் எய்ம்ஸ் தரத்திலான மருத்துவ மனைகளை மாவட்டம்தோறும் அமைக்க முடியும்... ஐஐடி, ஐஐஎம் போன்ற கல்லூரிகளை அதிக அளவில் தமிழகத்தில் நிறுவ முடியும்....

1959–ஆம் ஆண்டின் தமிழ்நாடு இந்து சமய அறக்கொடைகள் சட்டம், 22, ஜனவரி 1960, 1ஆம் தேதியன்று அமலுக்கு வந்தது. இதன்படி, இந்து சமய திருக்கோயில்களை நிர்வகிப்ப தற்கான தனியான அரசுத்துறை ஒன்று உருவாக் கப்பட்டது...

இது தவிர, கோயில்களின் மூலம் பெறப்படும் வருமானத்தில்தான் பல லட்சம் பேருக்கு இலவச அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது... கோயில்கள் நடத்தும் 54 பள்ளிகளில் பிளஸ் 2 முடிக்கும் மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி படிப்பிற்கு 100% scholarship வழங்கப்படுகிறது...

சமூகத்தால் நிராகரிக்கப் படுகின்ற, 3000 முன்னாள் ராணுவ வீரர்களுக்கு திருக்கோயில் பாதுகாப்பு படையில் வேலை வழங்கப்பட்டு இருக்கிறது. இதுதவிர மனநல காப்பகம், முதியோர் இல்லங்கள், சித்தா மருத்துவமனைகள், ஆங்கில மருத்துவமனைகளும் கோயில்களால் நடத்தப் பட்டு வருகின்றன...

வருடந்தோறும் 1000 ஏழைகளுக்கு கோவில் பணத்தில் இலவச திருமணங்கள் நடைபெறுகின் றன.. 40 யானைகள் பராமரிக்கப்படுகின்றன...

இவற்றில் ஒரு சதவிகிதம் கூட சினிமா மற்றும் ஊடகத்துறையை சார்ந்த எவரும் செய்ததில்லை என்பது தான் உண்மை....

50 ஆண்டுகால தமிழக சினிமாவின் வருமானம் சுமார் 5 லட்சம் கோடிகள். ஆனால் முழுத்தொகையையும் ஒருசில தனியார்தான் அனுபவிக்கின்றனர்..

கோவில்கள் செய்த புண்ணிய காரியத்தில் சினிமா துறையை சார்ந்தவர்கள் எவ்வளவு செய் திருப்பார்கள்? பகுமானமாக பேசும் கூத்தாடிகள் இனியாவது சமூக பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.. தமிழர்களின் நாகரிகத்தின் மேல்போர் தொடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும்... தமிழர்களின் மத உணர்வுகளை காயப்படுத்து வதை கைவிட வேண்டும்...

நன்றி: Kalaikovil Balasubramanyam



# நீங்களும் மருத்துவர் ஆகலாம்!!!



- வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி, பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி நீங்கும்.
- பொடித்த படிகாரத்தை தூள் செய்து அதைக் கொண்டு வாரம் மூன்று முறை பல் தேய்த்து வந்தால் பற்களின் கறை, இரத்தம் வடிதல், வாய் துர்நாற்றம் நீங்குவதோடு பல் ஈறுக்கும் வலு கொடுக்கும்.
- வயிற்றுப் போக்கு அதிகமாக இருந்தால் ஜவ்வரிசியை சாதம் போல வேகவைத்து மோரில் கரைத்து உப்பு போட்டு சாப் பிட்டால் வயிற்றுப்போக்கு நின்று விடும். வயிற்றில் வலியும் இருக்காது.

# பூக்களும் பலன்களும்

அல்லிப்பூ ............செல்வம் பெருகும்
பூவரசம்பூ ............உடல் நலம் பெருகும்
வாடமல்லி ............மரணபயம் நீங்கும்
மல்லிகை ............குடும்ப அமைதி
செம்பருத்தி..........ஆன்ம பலம்
காசாம்பூ ............நன்மைகள்
அரளிப்பூ.............கடன்கள் நீங்கும்
அலரிப்பூ .............இன்பமான வாழ்க்கை
செம்பருத்தி..........ஆன்ம பலம்
ஆவாரம் பூ..........நினைவாற்றல் பெருகும்
கொடிரோஜா ........குடும்ப ஒற்றுமை
ரோஜா பூ ............நினைத்தது நடக்கும்
மருக்கொழுந்து ....குலதெய்வம் அருள்
சம்பங்கி ..............இடமாற்றம் கிடைக்கும்
செம்பருத்தி பூ.....நோயற்ற வாழ்வு
நந்தியாவட்டை.....குழந்தை குறை நீங்கும்
சங்குப்பூ..............சிவப்பூஜைக்கு சிறந்தது
(வெள்ளை)
சங்குப்பூ..............விஷ்ணு பூஜைக்கு
(நீலம்) ..................சிறந்தது
மனோரஞ்சிதம்.....குடும்ப ஒற்றுமை,
..........................தேவ ஆகர்ணைம்

தாமரைப்பூ ..........செல்வம் பெருகும் அறிவு வளர்ச்சி பெறும்
நாகலிங்கப்பூ........லட்சுமி கடாட்சம், ஆரோக்யம்
முல்லை பூ தொழில் வளர்ச்சி, புதிய தொழில்கள் உண்டாகும்
பட்டிப்பூ (நித்திய கல்யாணி பூ) .......முன்னேற்றம் பெருகும்
தங்க அரளி (மஞ்சள் பூ) குருவின் அருள், பெண்களுக்கு மாங்கல்ய பலம் கடன்கள் நீங்கும் , கிரக பீடை நீங்கும்
பவள மல்லி .........இது தேவலோக புஷ்பமாகும். இந்த செடியினை வீட்டில் வளர்ப்பது மிக அவசியமாகும். இதன்மூலம் தேவர் களினதும், ரிஷிகளினதும் அருளும், ஆசியும் கிடைக்கும்.




ஆன்மிகமலர் மெயில் புக்
16-31 மே 2020
www.aanmeegamalar.com

பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான சகாதேவனுக்கு ஜோதிடத்தில் முக்காலமும் அறியும் ஆற்றல் பெற்றிருந்தார். இவருக்கு இந்த ஆற்றல் கிடைத்தது மிகப் பெரிய நிகழ்வாகும்.

பஞ்ச பாண்டவர்களின் தந்தையான பாண்டு உயிர் பிரியும் தருணத்தில் மகன்கள் ஐவரையும் அருகே அழைத்து , தான் இறந்தவுடன் தன் உடலை தகனம் செய்யவேண்டாம் என்றும், மாறாக பிய்த்து தின்று விடும்படியும், அப்படி செய்தால் முக்காலமும் உணரும் ஆற்றல் கிடைக்கும் என்று சொல்லி விட்டு உயிர் துறக்கிறான்.

பாண்டவர்களும் அவர்களது தந்தை பாண்டு சொன்னபடி செய்ய திட்டமிடும் போது அங்கே கிருஷ்ண பரமாத்மா வருகிறார்.

விஷயத்தை கேட்டவுடன் பாண்டவர்களை திட்டுகிறார்.

சாகும் காலத்தில் உங்கள் தந்தைக்குத்தான் புத்தி பிசகிவிட்டதென்றால் , உங்களுக்கு என்ன ஆனது?யாராவது பிணத்தை தின்பார்களா?

வாருங்கள் விறகு எடுத்து வந்து உங்கள் தந்தையை தகனம் செய்வோம் என்று பாண்டவர்களை அழைத்துச்செல்கிறார்.

மிருகங்கள் பாண்டுவின் உடலை இழுத்துச் சென்றுவிடாமல் இருக்க சகாதேவனை காவலுக்கு விட்டுச் செல்கிறார்கள்.

அவர்கள் அப்பால் போனவுடன் சகாதேவன் தன் தந்தையின் இறுதி வாக்கை மீற விரும்பாமல் அவரது சுண்டுவிரலை மட்டும் உடைத்து தின்று விடுகிறான்.

உடனே அவனுக்கு முக்காலத்தையும் உணரும் சக்தி கிடைத்து விடுகிறது.

விறகுகளை கஷ்டப்பட்டு தூக்கி வந்த பாண்டவர்கள் மிகவும் களைப்புடன் விறகுக் கற்றைகளை கீழே போட்டுவிட்டு களைப்பாக அமர்கிறார்கள்.

கிருஷ்ணரும் ஒரு விறகுச்சுமையை தூக்கி வருகிறார். ஆனால் விறகுக்கட்டு அவர் தலைக்கு அரையடி மேலாக காற்றில் மிதந்து வருகிறது. அதுமற்றவர்கள்கண்களுக்கு தெரியவில்லை.

சகாதேவனுக்கு மட்டும் அது தெரிகிறது.

கிருஷ்ணரும் மிக களைப்படைந்தவர் போல ஸ்ஸ்ஸப்பா என்று விறகை கீழே போட்டுவிட்டு அமர்கிறார்.

அவரருகில் சென்ற சகாதேவன் , கண்ணா! எல்லோரும் விறகைசுமந்துவந்தார்கள். அவர்கள் களைப்பாவது நியாயம். உன் விறகுக்கட்டு

# யார் கணித்தாலும் 99 சதவீதம்தான் ஜோதிடம் பலிக்கும்

காற்றில் மிதந்துதானே வந்தது. நீ ஏன் களைத்தது போல நடிக்கிறாய்?என்று கேட்கிறான்.

உடனே கிருஷ்ணருக்கு விஷயம் விளங்கி விடுகிறது.

சகாதேவனை தனியே அழைத்துச் சென்று அவர் விபரம் கேட்க ,சகாதேவன் தனது தந்தை பாண்டுவின் விரலைத் தின்றதை ஒத்துக்கொள்கிறான். எதிர்காலம் தேவ ரகசியம் என்றும், இறைவன் போக்கில் குறுக்கிடுவது அதர்மம் என்று கிருஷ்ணர் கூறுகிறார்.

சகாதேவனுக்கு தெரிந்த எதிர்காலம் தொடர்பான விஷயங்களை எப்போதும் , எவரிடமும் சொல்லகூடாது என்று சகாதேவனிடம் சத்தியத்தை வாங்கிக் கொள்கிறார் கிருஷ்ணர்.



தனக்கு முக்காலமும் முக்காலமும் உணரும் ஜோதிடக்கலை ஆற்றல் தெரியும் என்ற ஆணவத்தால் சகாதேவனுக்கு சற்று கர்வம் அதிகமாகிவிட்டது.

துரியோதனன்,பாண்டவர்களை அழிப்பதற்கு ,போருக்கான சிறந்த நாளை கணித்துக் கொடுக்கும்படி சகாதேவனிடம் கேட்க , சகாதேவனும் நாளைக் குறித்துக்கொடுக்கிறான். அந்தளவிற்கு அவன் ஜோதிடக்கலையில் உண்மையாக இருந்தான்.

போரில் கர்ணன் இறக்கும் தருவாயில்தான், கர்ணன் தன் உடன்பிறந்தவன் என்ற உண்மை அவனுக்கு தெரியவருகிறது.

இதனால் தனக்கு தெரிந்த முக்காலமும் உணரும் ஜோதிடக்கலையில் இந்த உண்மையை தெரிந்து கொள்ளமுடியவில்லையே என்று ஜோதிடத்தில் நம்பிக்கை இழக்கிறான்.

18 நாள் நிகழ்ந்த குருஷேத்திரப் போர் முடிவடைந்த பின் சகாதேவன் கிருஷ்ணனைப் பார்த்து, கிருஷ்ணா! ஜோதிடம் என்பது பொய் தானே என்று கேட்கிறான்.

அதற்கு கிருஷ்ணன் ஜோதிடத்தில் அனைத்தும் அறிந்த நீயே இப்படி கூறலாமா?என்று சொல்கிறார்..

ஜோதிடத்தில் அனைவருடைய பிறப்பு ரகசியமும் என் கணிதத்தில் தெரிந்து கொண்டேன். ஆனால் கர்ணன் என் உடன்பிறந்தவன் என்ற ரகசியம் என் ஜோதிட கணிதத்தில் வரவில்லை.

அப்படியென்றால், ஜோதிடம் பொய்தானே கிருஷ்ணா? என்று மீண்டும் கேள்வி எழுப்பினான் சகாதேவன். இதை பொறுமையாக கேட்ட கிருஷ்ணன், அனைத்தையும் நீ ஜோதிடத்தில் தெரிந்துகொண்டால் பிறகு நான் எதற்கு???

இந்த பதிலைகேட்டவுடன் சகாதேவனுக்கு தூக்கிவாரிப்போட்டது.

ஜோதிடத்தைவிட இறைசக்திதான் பெரியது என்பதை உணர்ந்தான் சகாதேவன், எப்படிப்பட்ட சிறந்த ஜோதிடனாக இருந்தாலும் நிச்சயம் அவர்களால் 99% மட்டுமே தங்களால் கணிக்க முடியும்.

இதன் காரணமாகத்தான் விதி என்பதை கூட இறைவன் மீது நம்பிக்கை வைத்து மதியால் வெல்லலாம் என்று நம் முன்னோர் கூறினர். ஜோதிடத்தில் முழுவதுமாக மூழ்கி விடாமல், இறைவனுடன் முழுமையாக அர்ப்பணிப் புணர்வுடன் இருந்தாலோ ஜோதிடத்தின் பலனையும் பெறலாம்.




# சொர்க்க வாசல் உருவான கதை

விஷ்ணுபகவான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது, அவருடைய இரு காதில் இருந்து மது, கைடபர் என்ற இரு அசுரர்கள் தோன்றினார்கள்.

அந்த இருவரும் தேவர்களை மிகவும் கொடுமைப்படுத்தினார்கள்.

இந்த அசுர சகோதரர்களை அடக்க முடியாமல் திணறினர் தேவர்கள்.

அதனால் விஷ்ணுவின் சக்தியால் உருவான இந்த அசுரர்களை விஷ்ணுபகவான் ஒருவரே அடக்க முடியும் என்ற முடிவில் பகவானிடம் தேவர்கள் முறையிட, பெருமாள் மது, கைடபருடன் போர் செய்தார். ஸ்ரீமந் நாராயணனிடம் யுத்தம் செய்ய முடியாமல் அவரிடம் அசுர சகோதரர்கள் சரண் அடைந்தார்கள்.

“பகவானேஞ்தங்களின் சக்தியால் நாங்கள் உருவானதால் எங்களுக்கு நீங்கள் கருனை காட்ட வேண்டும்.” என்ற பணிவாக கூறி வைகுண்டத்தில் பெருமாளுடன் இருக்கும் பாக்கியத்தையும் பெற்றார்கள் இந்த அசுர சகோதரர்கள். தங்களை போல் பலரும் இந்த பாக்கியம் பெற வேண்டும் என்று என்னி அசுரர்களாக இருந்தாலும் நல்ல மனதுடன் பெருமாளிடம் வேண்டினர்.

“எம்பெருமானேஞ்தாங்கள் வைகுண்ட ஏகாதசி நாளில் திருவரங்க வடக்கு வாசல் வழியாக, அர்ச்சாவதாரத்தில் (மனித வடிவம்) தாங்கள் வெளிவரும்போது, தங்களை தரிசிப்பவர்களுக்கும், தங்களை பின்தொடர்ந்து வருபவர்களுக்கும், அவர்கள் தெரிந்து செய்த பாவங்கள், அறியாமல் செய்த பாவங்கள் யாவும் நீங்கி அவர்களுக்கு முக்தி அளிக்க வேண்டும்.” என்று கேட்டுக் கொண்டனர் அசுர சகோதரர்கள்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறக்கப்பட்டு, பெருமாள் பவனி வரும் நிகழ்ச்சி இனிதே நடைபெறுகிறது.







# மனிதனுடைய சிறந்த பாதுகாப்பு ஞானமே

82 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “ ஞானம் என்னும் கோட்டைக்குள் உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். இதைவிடச் சிறந்த பாதுகாப்பு வேறொன்றுமில்லை. முழுமையான புரிந்து கொள்ளும் ஆற்றல், உங்களுக்கு எதுவும் தீங்கிழைக்க முடியாத நிலைக்கு உங்களைக் கொண்டுவரும். ஆனால் அந்த ஞானத்தை அடையும்வரை, சபலம் எழும்போது, அந்தச் செயல் அல்லது உந்துதலை முதலில் நிறுத்த வேண்டும். பிறகு பகுத்தாராய வேண்டும். நீங்கள் பகுத்தாராய முதலில் முயன்றால், நீங்கள் செய்ய விரும்பாத செயலை, உங்களையும் மீறி நீங்கள் செய்யுமாறு வற்புறுத்தப்படுவீர்கள்; ஏனெனில் சபலமானது எல்லா பகுத்தாராய்வையும் வென்றுவிடும். ‘முடியாது’ என்று மட்டும் சொல்லிவிட்டு எழுந்து சென்று விடுங்கள். அதுதான் சாத்தானிடமிருந்து தப்பிப்பதற்கான மிக நிச்சயமான வழி. சபலம் நுழையும்போது ‘மாட்டேன்’ என்னும் சக்தியை நீங்கள் எவ்வளவு அதிகம் விருத்தி செய்கிறீர்களோ, அவ்வளவு அதிகம் சந்தோஷமுடையவராக இருப்பீர்கள்; ஏனென்றால் உங்கள் மனச்சாட்சி எதை நீங்கள் செய்ய வேண்டும் என்று கூறுகிறதோ அதைச் செய்யும் வல்லமையில்தான் அனைத்து ஆனந்தமும் அடங்கியுள்ளது.”

“ உங்களுடைய சூழலும், புலன் ஆசைகளும் உங்களை ஆதிக்கம் செலுத்த இடம் கொடாதீர்கள். நற்பண்பும் ஆன்மீக வாழ்வும் புலன் நுகர்ச்சியைவிட மிக மிக வசீகரமானவை. ஆனாலும் சபலத்தின் பழக்கச் சங்கிலிகள் மனிதர்களை இறுக்கமாகப் பிடித்து வைத்துள்ளன. இறைவன் உங்களை ஒருமுறை தன்னுடைய அன்பினால் ஆட்கொண்டால் நீங்கள் அதற்கு மேலாக வேறெதையும் விரும்பமாட்டீர்கள். உங்கள் கவனத்தை வேறெதுவும் ஈர்க்காது. அவன்தான் மிகவும் விரும்பப்படவேண்டிய பொக்கிஷம் என நீங்கள் திட நம்பிக்கை கொண்டுவிட்டால், வெளி உலகத்திலுள்ள எதுவும் உங்களை மறுபடியும் சபலப்படுத்தி உங்கள் விவேக சக்தியை வெல்ல முடியாது.”

“இறைவனை அறியவேண்டும் என்பது மட்டும்தான், ஒருவன் பெற்றிருக்கவேண்டிய பயனுள்ள பேரவா. ஏனென்றால் அவன்தான் என்றும் நிலைத்திருக்கும் ஆனந்தம். நமது எல்லா இன்னல்களுக்கும் அவனே சஞ்சீவி மருந்தாகையால், அவனை நாம் நாடவேண்டும். நமது எல்லா தேவைகளுக்கும் அவனே தீர்வு. நமது உள்ளங்கள் ஏங்கும் அன்பு, புகழ், அறிவு மற்ற எல்லாவற்றையும் அந்த முழுமுதற் பொருளைத் தொடர்புகொள்வதில் காண்கிறோம். நீங்கள் உலகில் மிகவும் புகழ்பெற்றவராக இருந்தாலும்கூட புகழைப் பற்றிய உங்கள் உணவிற்கு மரணம்தான் முடிவாகிறது. அப்பொழுது மக்கள் உங்களைப் புகழ்கிறார்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.”

மேலும் அவர் கூறுகிறார்: “ ஆகவே மரண வாயிலை நீங்கள் கடக்கும்பொழுது, நீங்கள் இழந்துவிடப் போகின்ற ஒன்றைப் பெறுவதற்காக ஏன் கடினமாக உழைக்க வேண்டும்? செல்வம், புகழ், கௌரவம், புலன் நுகர்ச்சி வெளி வசதிகள் அனைத்தும் தெய்வீகத் தொடர்பினால் ஏற்படும் உண்மையான பேரின்பத்திற்குப் பதிலாக மாயையினால் கொடுக்கப்படும் போலி இன்பங்களே. சபலத்தைவிட மேலான ஒன்றுடன், அதை ஒப்பிடும் அறிவு உங்களுக்கு இல்லாததால்தான், சபலம் மிகவும் சக்தி வாய்ந்ததாக உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் தீவிரமாக சபலத்தில் ஆழும்பொழுது, உங்கள் பகுத்தறிவு கணப்பொழுதிற்கு உங்கள் ஆசைகள் மற்றும் பழக்கங்களின் கைதியாகிறது. விடுதலைக்கான மிகச் சிறந்த வழி, ஒரு நொடியில் எல்லா உலக இன்பங்களையும் துறக்க உங்களுக்கு வல்லமை தரும் வற்றாத இறை ஆனந்தத்தில் ஒன்றிவிடுவதே.”

“ இப்பிறவியில் நீங்கள் உண்மையான இன்பத்தைக் கண்டுவிட்டால், இப்பிறவியில் மட்டுமல்லாமல், இறந்தபின்பும் நீங்கள் அதைப்பெற்றிருப்பீர்கள். எதை நீங்கள் விரும்புகிறீர்கள். ஒரு சில இன்பங்களை இப்பொழுது நிராகரிப்பதால் உங்களுக்குக் கிடைக்கும் இறைவனின் நித்திய ஆனந்தமா? அல்லது இப்பொழுதைய நிலையற்ற உலக இன்பமா? என ஒப்பிட்டுப்பார்த்து உங்கள் இதயத்தை நம்பச் செய்யுங்கள். முன்னேறுவதற்காக நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும்.” என்கிறார் அன்பு குருதேவர்.

இறைவனுக்கு முதலிடம் கொடுப்பதால்ஞ்ஞ்ஞ்ஞ்ஞ்..

‘ மனிதனுடைய சிறந்த பாதுகாப்பு ஞானமே’ என்று குருதேவர் ஆணித்தரமாகக் கூறுகிறார். அதை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இறைவனை உறுதியாக நம்புகின்ற, அவனை நேசிக்கின்ற ஒரு தீவிர பக்தன் முதலில் இறைவனிடத்தில் சரணடைவான். அதன் பின்னர் இறைவனின் வழிகாட்டுதலில் அவன் வாழத்தொடங்குவான். சரணடைந்த பின்னர், எல்லாமே இறைவன்தான் என்ற உறுதிப்பாடுடைய மனம் கிடைக்கப் பெறுவான். அதுதான் உண்மையான சரணாகதிக்கு அடையாளம். சரணாகதி அடைந்தாலே, அவனுடைய குறிக்கோள் ‘இறைவன்’ என்றும் அவனை உணரவேண்டும் என்றுமுள்ள கொள்கை வந்துவிடும். அந்த பக்தன் தன்னுடைய வாழ்க்கையில் நடக்கும் அனைத்திற்கும் இறைவனுக்கு மட்டும் முன்னுரிமையும் முதலிடமும் கொடுப்பான். அவன் இவ்வாறான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கையில், இறைவன் அவனை சோதிப்பான்.

எண்ணற்ற சோதனைகளை அவன் நேரிட வேண்டிய நிலை எழும். தீவிர பக்தன் இறைவனுக்காக வாழுகிறான். ஆனால் சாதாரண மனிதர்கள், தாம் நன்றாக வாழவேண்டும்; எல்லா சுகபோகங்களையும் அனுபவிப்பதற்காகவே வாழவேண்டும் என்பதற்காகவே வாழுகின்றனர். ஆனால் தீவிரபக்தன் அவற்றையெல்லாம் கைவிட்ட நிலையில் இறைவனுக்காகவே வாழுகின்றான். வாழ்க்கை எப்படியிருந்தாலும், கஷ்டமோ, நஷ்டமோ, இன்பமோ, துன்பமோ, எதுவாக இருந்தாலும் எல்லாம் தன் கர்மாவினால் ஏற்படுகிறது என்று அவன் அறிவான். இறைவனைக் கைவிடாமல் வாழ்ந்தாலே அவற்றையெல்லாம். வெல்ல முடியும். அதற்கு இறைவன் துணையிருப்பான் என்ற அதீத நம்பிக்கையுடன் வாழுவான். இந்த உலகம் மற்றும் உலகப்பொருட்களைவிட மேலானது அழிவற்ற ஆத்மா. உடல் எனும் கூட்டில் வாழுகின்ற ஆத்மாவை இறைவனுடன் சேர்ப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். அதற்கு விவேகத்தைப் பயன்படுத்தி புலன்களையும் மனதையும் அடக்க வேண்டும். எல்லாம் அடங்கும்பொழுது இறைவனின் வழிகாட்டுதல் வர ஆரம்பிக்கும். அதற்கேற்ப நாம் வாழ்ந்தால் இறைவனிடமிருந்து ஆனந்தத்தை உணரலாம்.

சாதாரண நிலையிலிருக்கும் ஒரு பக்தனின் மனம் மாயையுடன் கலந்திருக்கும். அவனுக்கு கர்மாவால் ஏராளமான துன்பங்கள் நேரும். ஆனால் இறைவனிடத்தில் சரணாகதி அடைந்த ஒரு தீவிர பக்தனுக்கும் முன்னர் கூறியுள்ளதுபோன்று இறை வழிகாட்டுதல் வரும்பொழுது இறைவனின் சோதனைகளும் வரும். அவை முதலில் பெரிதாகத் தோன்றும். ஆனால் முடிவில் எல்லா துன்பங்களும் பனிபோன்று கரைந்து விட்டது போலிருக்கும். அது எவ்வாறு என்றால் இறைவனின் அன்புக்கரங்கள் அவனை அணைக்கின்றன. அது மட்டுமின்றி, யாராவது நம்முடன், நமக்கு வெறுப்பு ஏற்படும் வண்ணம் பேசினாலோ அல்லது நம் விருப்பத்திற்கு மாறாக நடந்து நம்மை துன்புறுத்தினாலோ, அந்த வெறுப்பும் துன்பமும் சிறிது நொடிகளுக்குத்தான். உடனே அந்த மனநிலை மாறிவிடும். நாம் சாதாரண மனநிலையிலிருந்தால் மனம் மாறாதல்லவா! ஆனால் மாறுதே ! அது எப்படி ? அதைச் செய்வதே இறைவன்தானே ! முழு சரணாகதியடைந்தால் அவனுடைய முழு பொறுப்பையும் இறைவன் ஏற்கிறான். இறைவன் பக்ததாசனாயிற்றே ! அதனால் இந்த பக்தன் எதற்கும் கவலைப்படத்தேவையில்லை. அவன் தன் கடமைகளை மட்டும் செம்மையாகச் செய்தாலே போதும். மீதியெல்லாம் இறைவனே பார்த்துக்கொள்வான். இறைவனை நேசிக்கின்ற ஒரு பக்தனின் மனநிலையை இறைவனே உயர்த்துவான். அது நிச்சயமாக ஒரு மனிதனால் தன் மனதை உயர்த்துவது சாத்தியமாகாது. ஒரு பக்தனுடைய எல்லா நடவடிக்கைகளையும் இறைவன் பார்க்கிறான். அவனுடைய வாழ்க்கை முறையை இறைவன் கவனிக்கிறான். இறைவனுடன் இணைவதற்கான அதிக ஆசை,; பயிற்சி, முயற்சி, முக்கியமாக வைராக்கியமுடைய மனம் இவையெல்லாம்தான் ஒருவனை இறைவனுடன் சேர்க்கும் கருவிகள். இந்தக் கருவிகள் கண்ணிற்குத் தெரியாது.

இறைவனை உணரவேண்டும் என்ற உண்மையான குறிக்கோளுடைய ஒரு மனிதனின் மனம் உலகப் பொருட்கள்மேல் போகாது. அதில் எவ்வளவு இனிமை இருந்தாலும் சுவையிருந்தாலும் அது தாற்காலிகம் மட்டுமேயாகும் என்பதை அவன் நன்கு அறிந்திருப்பான். யதார்த்தமான இனிமையும் சுவையும் இறைவனில் மட்டும்தான் உள்ளது என்பதை ஒரு தீவிர இறைபக்தன் அறிவான். அவன் எங்கு சென்றாலும் அவனுடன் இறைவனின் அன்புக்கரங்கள் பாதுகாப்பிற்காகச் செல்லும். அவன் உலகப்பொருட்கள் ஒவ்வொன்றாகப் பார்ப்பான்; “ இதில் சுவையுள்ளதா; இதில் ஆனந்தம் உள்ளதா; இதில் பேரன்பு உள்ளதா?” ஆனால் அவற்றிலெல்லாம் அவனுடைய கேள்விக்குப் பதில் ‘இல்லை’ என்பதை இறைவன் அவனுக்கு உணர்த்துவான். சுவையும் ஆனந்தமும் ஒவ்வொரு பொருளிலும் இருக்கின்றதுபோல் எண்ணிப்பார்த்தால் எல்லாம் ஒரு நொடியில் மறைந்து விடுவதை அவன் காண்பான். “ ஓ, இவற்றை நான் இனி நினைக்கமாட்டேன். இவ்வாறிருக்கையில் எதற்காக நான் அவற்றை நினைக்க வேண்டும்! அல்லது ஆசைப்படவேண்டும்” என்ற மனப்பான்மை வந்துவிடும். பின்னர் அவன் அவற்றை நினைக்கமாட்டான். இவ்வாறு, இறைவனே அவனுக்கு உலகம், உலகப்பொருட்கள் மற்றும் சம்சார வாழ்க்கை இவற்றிலெல்லாம் எந்த இன்பமும் இல்லாமலிருப்பதை உணர்த்திவிடுகிறான். அதன் பின்னர் அவற்றைப்பற்றிய எண்ணங்கள் அனைத்தும் அவனிடத்திலிருந்து மறைந்துவிடுவதை அவன் உணருவான்.

மற்றொரு விஷயம் என்னவென்றால் முறையாக தன் ஆன்மாவை இறைவனிடத்தில் சேர்ப்பதற்கான தேவையற்ற எல்லா வழிகளையும் துறக்கச் செய்வான் இறைவன். அதாவது தேவையானவற்றை மட்டும் எடுத்துக்கொள்வான். ஓம்காரஸ்வரூபன், ப்ரணவஸ்வரூபன் என்றெல்லாம் கூறப்படுகின்ற இறைவனி (நிர்குண பரப்பிரம்மம்) டத்தில் இரண்டறக்கலக்கச் செய்வான். அதற்கான வழிதான் தியானம். சரணாகதியிலிருந்து ஆரம்பித்து ஞானம் கிடைக்கும் வரையுள்ள ஆன்மீக நிகழ்வுகளுக்கெல்லாம் ஒரே காரணம் தியானம் மட்டும்தான். தியானத்தால் ஒழிய எந்த வழியும் திறக்காது. எனவே தியானம்தான் மிகவும் உயர்ந்த வழி. ‘யோகதா’ இயக்கம் மேலே கூறியவற்றிற்கெல்லாம் மிகவும் உன்னதமானதும் அரிதானதுமான இயக்கமாகிறது. தகுதியுடையவர்களை இறைவனே யோகதாவில் சேர்த்துவிடுவான். பின்னர் தானாகவே இறைவனிடத்தில் சேருவதற்கான குறிக்கோளையும் பிறப்பு இறப்புப் பிணியை அறுப்பதற்கான கொள்கையையும் உறுதிப்படுத்தச் செய்வான் இறைவன். பிறப்பும் இறப்பும் அறுக்க வேண்டுமென்றால் இறைவனை (நிர்குண பரப்பிரம்மத்தை) உபாசனை செய்து தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது ஆன்மீகத்தில் முன்னேற்ற மடைந்து பரிணாம வளர்ச்சி அடைய நேரும். அத்துடன் இறைவனை உணர்ந்து அறியலாம். இவ்வாறு ‘ தியானம்’ என்ற செயல் படிப்படியாக ஆன்மாவிற்கு, முன்னேற்றப் பாதையை அமைத்துத்தந்து இறைவனடி சேர்ந்து எந்த பயமுமின்றி முக்கியமாக மரணபயமின்றி பாதுகாப்பாக இறைவனுடன் வாழலாம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி)
சார்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909



# ஒவ்வொரு நரைமுடியும் நீ பூமியை விட்டு கிளம்ப வேண்டிய காலம் நெருங்கி கொண்டே இருக்கிறது என்று கடவுள் போடும் கடிதம்



## உடம்பு எப்போது பார்த்தாலும் சூடாகவே இருக்கிறது. கண் எரிச்சல், நீர் கடுப்பு அடிக்கடி வருகிறது இதை எளிதாக தீர்க்கலாம்...



தலைக்கு குளிக்கும் வழக்கம் என்ற ஒன்று இருந்தது. அது இப்போது அரிதாகி கொண்டே வருகிறது. தலைக்கு குளிப்பது என்றால் தலையில் தண்ணீரை ஊற்றி கொள்வது மட்டுமல்ல நன்றாக எண்ணெய் தேய்த்து ஊற வைத்து அதன்பிறகு குளிப்பதாகும். இப்படி குளிப்பதனால் பல நோய்கள் நம்மை எட்டி பார்ப்பதே கிடையாது இதனால் தான் அன்று வைத்தியனுக்கு கொடுப்பதை விட வாணியனுக்கு கொடுப்பது மேல் என்று பழமொழி உருவானது.

அதே போல தலைக்கு தண்ணீர் ஊற்றினாலும் சோப்பு, ஷாம்பு என்பவைகளை பயன்படுத்தும் வழக்கமே அதிகம் இருக்கிறது இதனால் தலைமுடி மட்டுமல்ல நமது சருமமும் கூட பொலிவிழந்து விடுகிறது. எனவே இவைகளை தவிர்த்து விட்டு இயற்கை பொருள்களை பயன்படுத்துவது மிகவும் நல்லது.

உங்களுக்கு அதிகமான உடல் சூடு இருப்பதற்கு பல காரணங்களை கூறலாம் நேரடியாக பரிசோதனை செய்தால் மட்டுமே சரியான காரணத்தை கண்டுபிடிக்க இயலும். இருந்தாலும் தலைக்கு சீயக்காய் போடும் போது அதனோடு சற்று கருவேப்பிலையும் வைத்து அரைத்து தலையில் போட்டு குளித்து வாருங்கள் உடல் சூடு தனிய துவங்கும். நல்ல பலனை பெறலாம்.

## கறுப்பான சருமம் கொண்டவர்களின் மனநிலையும், அதற்கான பரிகாரமும்?



கறுப்பாக இருப்பது ஒரு குற்றமா? கறுப்பாக இருப்பவர்கள் மட்டும் தான் ஒதுக்கப்படுவார்கள். மற்றவர்கள் தான் விரும்பப்படுவார்கள் என்று நினைப்பது குழந்தைத்தனமல்ல முட்டாள்தனம். பொதுவாக எந்த மனிதர்களுமே மற்றவர்களின் தோற்றத்திற்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுத்து நடப்பதாக நான் நினைக்கவில்லை.

பார்ப்பதற்கு கம்பீரம் இல்லாமலும், தெளிவு இல்லாமலும் இருப்பவர்களை முதன்முதலாக பார்க்கிற போது வேண்டுமானால், பொறுப்புகளை கொடுப்பதற்கு நம்பிக்கை வராமல் இருக்கலாம். ஆனால் பேசிப்பார்த்து அறிவுத்திறமையையும், செயல் திறமையையும் உணர்ந்த பிறகு யாரையும் அழகாக இல்லை என்று ஒதுக்குவதற்கு இன்று யாருமே கிடையாது.




ஆனால் கறுப்பாக இருப்பவர்கள், தன்னை அழகற்றவர்கள் என்று கருதுபவர்கள், தேவை இல்லாமல் இந்த குறைகளுக்காக வருத்தப் படுகிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். ஒரு பையன் நான் கண்ணாடி போட்டிருக்கிறேன் அதனால் ஆசிரியர் எனக்கு சரியாக பாடம் எடுப்பதில்லை என்று சொன்னால் அதை நம்ப முடியுமா? எந்த ஆசிரியரும் அப்படி இருப்பார்களா?

முதலில் யதார்த்தத்தை புரிந்து கொள்ளுங்கள். எடுத்தவுடன் நீங்கள் மதிக்கப் படுவது உங்கள் ஆடையை வைத்து. அதன் பிறகு நாகரீகமான உங்கள் நடையுடை பாவனையை வைத்து, மூன்றாவதாக உங்கள் அடக்கமான பேச்சை வைத்து, அதன் பிறகு தான் உங்கள் அறிவே மதிப்பீடு செய்யப் படுகிறது. ஒரு மனிதனை சிறந்தவனாக கருதுவதற்கு அழகு ஒரு காரணமே தவிர மற்ற ஒன்பது காரணங்கள் வேறு இருக்கிறது.

எனவே கறுப்பை பற்றி கவலைப்படுவதை விட்டு விட்டு அடுத்த வேலையை பாருங்கள். இருந்தாலும் பரிகாரம் என்று கேட்கும் போது அதை சொல்ல வேண்டியது எனது கடமை. இந்த விஷயத்திற்கு பரிகாரங்கள் செய்வதற்கு முன்பு சில ஆகார முறைகளை கவனிக்க வேண்டும்.

காரம், எண்ணெய் மற்றும் மசாலா பொருட்கள் உண்ணுவதை குறைக்க வேண்டும். சமைக்காத பச்சைக்காய்கறிகளை அதிகமாக பயன்படுத்த வேண்டும். பழச்சாறுகளை அடிக்கடி அருந்த வேண்டும். தினசரி இரவு நேரம் பாலில் குங்குமப்பூ சேர்த்து சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்தவும்.

இப்போது பரிகாரத்திற்கு வருகிறேன் மனிதனின் தேஜஸை


ஆன்மிகமலர் மெயில் புக்

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.



பாவம் சுருங்கி போய் விடுவார்கள்.

எப்போதும் இல்லாமல் இன்றைய காலசூழல் இளைஞர்களுக்கு பெரிய மனசுமையை தருவதாக இருக்கிறது. அதற்கு காரணம் உடல் உழைப்பு குறைந்து போய் ஏறக்குறைய வேலைகள் அனைத்தும் உட்கார்ந்த இடத்திலையே செய்ய வேண்டிய நிலை வந்து விட்டது தான். உடம்பில் வேர்வை வர பாடு படுபவனுக்கு அவ்வளவு சீக்கிரத்தில் உடல் குறைபாடுகள் வந்து விடாது.

பொதுவாக இளநரை வர வேலையின்மை மட்டும் காரணமில்லை மரபு சார்ந்த சில விஷயங்களும் அதில் அடங்குகிறது. வழிவழியாக ஒரு குடும்பத்தாருக்கு இளம் வயதிலையே நரைவருகிறது என்றால் அதை எந்த மருந்துக்களாலும் தீர்க்க முடியாது என்று உறுதியாக சொல்லலாம். அது இல்லாமல் நரை வந்தால் அக்குறையை நிவர்த்தி செய்ய நமது சித்தர்கள் பக்கவிளைவுகள் இல்லாத சில எளிய மருந்துகளை சொல்லியிருக்கிறார்கள்.

சிவகரந்தை என்ற ஒரு மூலிகை இருக்கிறது. இதை பூ பூப்பதற்கு முன்பு பிடுங்கி நிழலில் உலர்த்தி இடித்து சலித்து வைத்துகொள்ள வேண்டும். அத்தோடு கரிசலாங்கண்ணி இலையையும் உலர்த்தி பொடி செய்து சிவகரந்தை பொடியுடன் சமமாக கலந்து தினசரி காலை மாலை இருவேளையும் சுத்தமான பசு நெய்யில் கலந்து ஒரு மண்டல காலம் சாப்பிட்டு வந்தால் இளநரை கண்டிப்பாக மறைந்து முடி கருத்துவிடும். இந்த மருந்து சாப்பிடும் காலத்தில் மது மற்றும் புகையிலை நிச்சயம் பயன்படுத்த கூடாது. அதிகபடியான காரத்தையும் புளிப்பையும் குறைக்க வேண்டும் சாப்பிட்டு பாருங்கள் நல்ல பலன் கிடைக்கும்.

கட்டுப்படுத்தும் தெய்வம் முருகன். அவருக்கு செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து “ஓம் சரவணபவ” என்ற ஆறெழுத்து மந்திரத்தை ஜபம் செய்து வணக்கம் செலுத்த வேண்டும். தீப்புண், முகவாதம் போன்றவைகள் வந்தவர்களுக்கு ஆடைகள் வழங்கி அவர்களிடம் ஆசி பெற வேண்டும். இப்படி செய்தால் கறுப்பர்கள் எல்லோரும் சிவப்பர்கள் ஆவார்களோ என்னவோ தெரியாது நிச்சயம் உங்களிடம் ஒரு கவர்ச்சி பிறக்கும்.

## இளநரை தீர பக்கவிளைவுகள் இல்லாத எளிமையன மருந்துகள் உள்ளன....

ஐம்பது வயதை தொட்ட பிறகு நரைமுடி வந்தால் யாரும் வருத்தபடுவதில்லை அதை ஒரு அழகாகவே பார்க்கிறார்கள். ஒவ்வொரு நரைமுடியும் நீ பூமியை விட்டு கிளம்ப வேண்டிய காலம் நெருங்கி கொண்டே இருக்கிறது என்று கடவுள் போடும் கடிதம் என்றே தத்துவ மொழிகளும் கூறபடுகின்றன.

வயதாலும் கூட யாரும் முதுமை பருவத்தை அவ்வளவு சுலபமாக ஏற்றுகொள்ள மாட்டார்கள் ஒரு நரைமுடி வந்துவிட்டாலே மனதில் தளர்ச்சியும் ஒருவித நம்பிக்கை இன்மையும் தாழ்வு மனப்பான்மையும் வந்துவிடுகிறது. வயதான கிழங்களுக்கே இந்த நிலை என்றால் இளைஞர்களின் மனநிலையை கேட்க வேண்டாம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434





மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து




நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் எதுவுமில்லை

இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...

# வாழ்வில் சந்திரன் ஏற்படுத்தும் தாக்கம்

மனிதனின் நடத்தை மீது சந்திரனுக்கு உள்ள நல்ல தாக்கம் மற்றும் எதிர்மறை தாக்கம் பற்றி பல்லாண்டுகளாக விஞ்ஞான அறிக்கைகள் வெளி வந்துள்ளன. இந்த அறிக்கைகள் மூலமாக, மன செயல்பாடுகள் அதிகரித்தல், பொது மற்றும் மனநல அவசர சிகிச்சை பிரிவிற்கு அதிகமானோர் செல்லுதல் மற்றும் மக்கள் அதிக அளவு உடல்ரீதியான, மனோரீதியான கஷ்டங்களை உணர்தல் போன்றவை பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

ஆன்மீக அறிவியல் ஆராய்ச்சி அறக்கட்டளை (எஸ்.எஸ்.ஆர்.எஃப்.) ஆன்மீக ஆராய்ச்சி முறைகளைக் கைக்கொண்டு மனித நடத்தை மீது சந்திரனுக்கு உள்ள தாக்கத்தை ஆய்வு செய்துள்ளது. ஆறாவது அறிவைக் கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆன்மீக ஆராய்ச்சி மூலமாக, ஆம் மனித நடத்தை மீது சந்திரனின் தாக்கம் உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. சந்திரன் நம் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தின் பல அம்சங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 2.சந்திரனின் பொதுவான சூட்சும விளைவு

நக்ஷத்திரங்கள், கிரஹங்கள் மற்றும் விண்கோள்கள் ஆகியவை தங்களின் ஸ்தூல தன்மைகளுடன் கூட சூட்சும அதிர்வலைகளையும் வெளிப்படுத்துகின்றன. அந்த ஸ்தூல தன்மைகளும் சூட்சும அதிர்வலைகளும் நம் மீது வெவ்வேறு விகிதங்களில் ஸ்தூலமாக மற்றும் சூட்சுமமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

சந்திரனிலிருந்து வெளிப்படும் அதிர்வலைகள் மனோமய கோசத்தின் அதிர்வலைகளை தாக்குகின்றன, அதாவது மனித மனத்தை தாக்குகின்றன. இங்கு மனம் என்பது நமது உணர்வுகள், ஆசைகளைக் குறிக்கிறது. மனம், வெளிமனம் மற்றும் ஆழ்மனம் ஆகிய இரு கூறுகளைக் கொண்டது. ஆழ்மனதில் பல எண்ணப்பதிவுகள் பதிந்துள்ளன. அவையே நம் அடிப்படை இயல்பை ஆளுமையை நிர்ணயிக்கின்றன. அனால் நமக்கு நம் ஆழ்மனதில் உள்ள எண்ணங்கள் மற்றும் பதிவுகளைப் பற்றித்



தெரிவதில்லை. இந்த எண்ணப்பதிவுகள் பல பிறவிகளாக சேர்ந்துள்ளன.

நம் எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளின் ஊக்கியாக மனதிலுள்ள இந்த எண்ணப்பதிவுகள் விளங்குகின்றன. எண்ணப்பதிவுகள் மற்றும் நம் எண்ணங்களுக்கு அவர்களுக்கென்று தனி சூட்சும அதிர்வலைகள் உள்ளன.

நம் எண்ணங்களின் சூட்சும அதிர்வலைகளைக் காட்டிலும் சூட்சுமமானது சந்திர அதிர்வலைகள். மனதின் எண்ணப்பதிவுகளின் அதிர்வலைகள் சந்திர அதிர்வலைகளைக் காட்டிலும் சூட்சுமமானது. சந்திர அதிர்வலைகள் நம் ஆழ்மனதிலுள்ள எண்ணப்பதிவுகளை வெளிமனத்திற்கு கொண்டு வரும் ஆற்றல் கொண்டது. வெளிமனதிற்கு வந்த பின் நமக்கு அது தெரிய வருகிறது. அதனால் ஒருவரின் மனதிலுள்ள பிரதானமான எண்ணப்பதிவுகள் அவர் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அடுத்த பகுதியில் இதைப் பற்றி மேலும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் சந்திரன் மிருகங்களின் மனங்களையும் பாதிக்கின்றது. இருந்தாலும் மிருகங்களின் ஆழ்மனதில் அடிப்படை ஆசைகளான பசி, உடலிச்சை, தூக்கம் ஆகியன மட்டுமே இருப்பதால் முடுக்கப்பட்ட எண்ணங்கள் இதை சார்ந்ததாகவே உள்ளன.

### 3.சந்திர ஒளி அல்லது வளர்பிறை தேய்பிறை ஆகியவற்றின் பாதிப்பு

அமாவாசை அன்று ஒளியில்லாத சந்திர பகுதி பூமியை நோக்கி உள்ளது. இருள் ரஜதம தன்மை மிகுந்த அதிர்வலைகளை வெளியிடுகிறது. ஒளிமிகுந்த சந்திர பகுதி பூமியை நோக்கும் சமயத்தைக் காட்டிலும் இது அதிக ரஜதம பிரதானமான அதிர்வலைகளை பூமியை நோக்கி வெளியிடுகிறது.

இதற்கு மாறாக பௌர்ணமி அன்று அதிகரிக்கும் ஒளியால் ரஜதம குறைகிறது. இருந்தாலும் பௌர்ணமி அன்று சந்திர அதிர்வலைகள் அதிக செயல்பாட்டில் இருப்பதால் மேலே கூறப்பட்ட குறிப்பு 2ல் விளக்கியபடி மனதின் செயல்பாடுகள் அதிகரிப்பதை உணர முடிகிறது. ஆழ் மனதில் ஊக்குவிக்கப்பட்ட எண்ணப்பதிவுகளுக்கு ஏற்றாற்போல், அதிகரித்த செயல்பாடு அதிகரித்த ஏதாவது எண்ணங்களாக இருக்கலாம் அல்லது மனதின் அதிகரித்த குறிப்பிட்ட எண்ணங்களாக இருக்கலாம்.

உதாரணத்திற்கு, ஒரு புத்தகத்தின் மீது முழு கவனம் உடைய ஒரு எழுத்தாளருக்கு அந்த புத்தகம் சம்பந்தமான அல்லது எழுதும் விதம் சம்பந்தமான எண்ணங்கள் அதிகரிக்கலாம். இது போன்ற எண்ணங்கள் திறன் மையத்திலிருந்து எழுகின்றன. அதன் மூலம் பௌர்ணமி அன்று அபரிமிதமாக அவர் எழுதக் கூடும்.

ஆனாலும் பெரும்பான்மையினருக்கு ஏதோ எண்ணங்கள் தான் எழுகின்றன. கோவம், பேராசை போன்ற பல ஆளுமை குறைகள் பிரதானமாக இருந்தால் அவை மேலெழும்பி இச்சமயத்தில் நம் மனதை ஆக்கிரமிக்கக் கூடும். உதாரணத்திற்கு ஒரு குடிகாரனுக்கு இந்நாளில் குடிக்க வேண்டும் என்ற எண்ணம்



ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

அதிகமாக எழும்.

அதே சமயம் ஒரு ஆன்மீகவாதி இந்தக் காலத்தை பயன்படுத்திக் கொண்டு பௌர்ணமி நாளில் அதிக ஆன்மீக பயிற்சி செய்து ஆழ்மனதில் பதிந்துள்ள ஆன்மீக எண்ணங்களை விழிப்படைய செய்ய முடியும்.

### 4.சந்திரனின் புவிஈர்ப்பு சக்தியால் உண்டாகும் விளைவு

அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரு நாட்களிலும் சந்திரன் மற்றும் சூரியனின் புவிஈர்ப்பு சக்திகள் இணைகின்றன. மற்ற நாட்களிலும் சந்திரனின் புவிஈர்ப்பு சக்தி பூமி மீது செயல்பட்டாலும் அமாவாசை மற்றும் பௌர்ணமியைப் போன்று அதிக சக்தி வாய்ந்ததாக இருப்பதில்லை.

நாம் நீண்ட மூச்சை உள்ளிழுக்கும்போது சாதாரண மூச்சைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக காற்றை வாய்க்குள் இழுக்கிறோம். இந்த உதாரணத்தை சந்திரன் மற்றும் பூமியின் மீது அதற்குள்ள புவிஈர்ப்புடன் பொருத்தி பார்க்கலாம். அமாவாசை மற்றும் பௌர்ணமி அன்று சந்திரன் பூமியை ஈர்க்கிறது, அதாவது முன்னர் கூறியது போல் சந்திரன் நீண்ட மூச்சை உள்ளிழுக்கிறது. சந்திரனின் அளவைப் போன்ற மூன்று மடங்கு வட்டவடிவ காற்று மண்டலம் பூமியிலிருந்து ஈர்க்கப்படுகிறது.

அமாவாசை மற்றும் பௌர்ணமி அன்று பூமியிலுள்ள பஞ்ச தத்துவங்களான பூரண பூமி தத்துவம், பூரண நீர் தத்துவம், பூரண வாயு தத்துவம் போன்றவை சந்திரனை நோக்கி ஈர்க்கப்படுகின்றன. இதன் மூலம் சூட்சும உயர் அழுத்த பகுதி உருவாகிறது.

இந்த செயல்பாட்டில் ஸ்தூல அளவில் தண்ணீர் சந்திரனால் ஈர்க்கப்படும்போது, தண்ணீரைக் காட்டிலும் நீராவி மேலெழும்பி சூட்சும உயர் அழுத்த பகுதியை சேர்கிறது. தீய சக்திகள் பெரும்பாலும் வாயு ரூபத்தில் இருப்பதால் அவையும் இந்த உயர் அழுத்த பகுதியில் ஈர்க்கப்படுகின்றன. அங்கு அவை ஒன்றாகக் குழுமி தங்களின் பலத்தை அதிகப்படுத்துகின்றன. அதனால் அவை இந்நாட்களில் மனித இனத்தை அதிக அளவு தாக்குகின்றன. மனிதர்களின் மீது நடத்தப்படும் இந்த ஆவிகளின் தாக்குதல் உடலளவில் மற்றும் மன அளவில் மும்மடங்கு அதிகமாக உள்ளது.

உலகெங்கும் உள்ள எஸ்.எஸ்.ஆர்.எஃப். ஆச்சிரமங்களில் அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் தீய சக்திகளின் தாக்குதல் மற்றும் சூட்சும எதிர்மறை அழுத்தம் அதிகரிப்பதை உணர முடிகிறது. இந்த தாக்குதல் அமாவாசை அல்லது பௌர்ணமிக்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஆரம்பித்து இரண்டு நாட்களுக்கு பின்பு வரை உள்ளது.



### 5.அமாவாசை மற்றும் பௌர்ணமியில் அதிகரிக்கும் சந்திரனின் தாக்கத்தால் ஏற்படும் விளைவுகள்

அமாவாசை தினத்தன்று ரஜதம தன்மையை பரப்பும் ஆவிகள் (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) ஆபிசார சடங்குகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் பெரும்பாலும் ராஜஸீக தாமஸீக மக்கள் ஆகியோர் பெரிதும் ஈர்க்கப்பட்டு தங்களின் ரஜதம நடவடிக்கைகளுக்குத் தேவையான கருப்பு சக்தியைப் பெறுகின்றனர். இந்நாள் எதிர்மறை நடவடிக்கைகளுக்கு உகந்த நாளாக இருப்பதால் இது அசுப தினமாக கருதப்பட்டு எந்த நல்ல காரியங்களும் நடத்தப்படுவதில்லை. சந்திரனின் ரஜதம தன்மை மனதை பாதிப்பதால் ரஜதம பிரதானமான செயல்களான ஓடிப் போதல், தற்கொலை அல்லது ஆவிகளால் பீடிக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அமாவாசை அன்று அதிகபட்சம் நடக்கின்றன. முக்கியமாக அமாவாசை இரவில், தூய்மைபடுத்தும் பரிபூரண தேஜ தத்துவமான சூரிய ஒளி இல்லாததால் ஆவிகள் மனிதர்களுக்கு அதிகபட்ச கஷ்டங்களைக் கொடுக்கக் கூடிய வாய்ப்பு அவைகளுக்கு கிடைக்கின்றது. அதிகரிக்கும் ரஜதம தன்மையை பயன்படுத்திக் கொண்டு ஆவிகள் கருப்பு சக்தியை தேக்கி வைக்கின்றன, அதன் மூலம் பெரும் இயற்கை பேரழிவுகள் மற்றும் மூன்றாம் உலகப் போரை மூளச் செய்யும் சம்பவங்களை நடத்துவிக்கின்றன.

பௌர்ணமி அன்று சந்திரனின் ஒளி மிகுந்த பகுதி பூமியை நோக்கி இருப்பதால் மற்ற இரவுகளைக் காட்டிலும் குறைந்தபட்ச ரஜதம அதிர்வலைகள் இரவில் வெளியிடப்படுகின்றன. அதனால் அன்று ஆவிகள், ரஜதம பிரதானமான மக்கள் அல்லது ஆபிசார சடங்குகளை செய்பவர்கள் ஆகியோருக்கு குறைந்த அளவே ரஜதம சக்தி கிடைக்கிறது. இருந்தாலும், ஆவிகள் (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) பௌர்ணமியின் புவிஈர்ப்பு சக்தியை பயன்படுத்தி அதிக கஷ்டங்களைக் கொடுக்கின்றன.

அமாவாசையின் பாதிப்பு அதிக சூட்சுமமாக உள்ளது. அமாவாசையின் பாதிப்பு வெளிப்பட தெரியாததால் அது மேலும் ஆபத்தானதாக உள்ளது. பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெரியாததால் அதற்கான நிவாரணமும் எடுக்கப்படுவதில்லை.

அமாவாசை மற்றும் பௌர்ணமி ஆகிய இரண்டையும் ஒப்பிட்டால் அமாவாசையின் பாதிப்பு நாம் அவ்வளவாக கவனிப்பதில்லை. ஆனால் அமாவாசை அன்றே எதிர்மறை பாதிப்பு அதிகமாக உள்ளது. இதன் காரணம் அமாவாசை அன்று மனிதர்கள் மீது அதிக சூட்சும நிலையில் பாதிப்பு ஏற்படுகிறது, ஆனால் பௌர்ணமி அன்று அதிகரிக்கும் எண்ணங்களை உடனே உணர முடிகிறது.

### 6.மனித நடத்தையின் மீது சந்திரனுக்கு உள்ள தாக்கத்தைப் பற்றிய நிரூபணத்தை ஏன் எந்த சமீபத்திய அறிக்கைகளும் தரவில்லை?

சற்று முந்தைய மருத்துவ/மனோதத்துவ ஆய்வுகள் மனித நடத்தையின் மீது சந்திரனுக்கு உள்ள தாக்கத்தைப் பற்றி பதிவு செய்துள்ளன. ஆனால் சமீபத்திய வருடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகள் இந்த சம்பந்தத்தை பதிவு செய்ய தவறிவிட்டன. இதன் காரணம் கடந்த பத்தாண்டுகளில் உலகில் ரஜதம ஆதிக்கம் அபரிமிதமாக அதிகரித்துள்ளது. இத்தகைய அதிகப்படியான ரஜதம தன்மையை ஆவிகளே (பேய்கள், பிசாசுகள், தீய சக்திகள் போன்றவை) முக்கியமாக தூண்டிவிட்டுள்ளன.

### 7. தீய விளைவுகளிலிருந்து நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?

அமாவாசை மற்றும் பௌர்ணமியால் ஏற்படும் தீய விளைவுகள் ஆன்மீக காரணங்களால் ஏற்படுவதால் இதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்கு ஆன்மீக நிவாரணங்கள் அல்லது ஆன்மீக பயிற்சியே உதவும்.

உலக அளவில் அன்றைய தினத்தில் முக்கிய தீர்மானங்களை முடிவு செய்யாமல் அல்லது வாங்கல்விற்றல் ஆகியவற்றில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. ஏனெனில் அவற்றின் மூலம் ஆவிகள் நம்மை பாதிக்கக் கூடும். அமாவாசை மற்றும் பௌர்ணமிக்கு 2 நாட்கள் முன்பாகவும் முடிந்த பின் 2 நாட்களும் நம் ஆன்மீக பயிற்சியை தரத்திலும் அளவிலும் மேலும் தீவிரமாக செய்வது நல்லது. அதோடு கூட உங்கள் மதத்திற்கு ஏற்ற நாமஜபத்தை செய்வதும் ஆன்மீக பாதுகாப்பிற்காக ஸ்ரீ குருதேவ தத்தாவின் நாமஜபத்தை செய்வதும் சிறந்தது.

தேய்பிறையின் போது அதாவது பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரை சந்திரனின் அளவு படிப்படியாக குறைவதால் அதிலிருந்து எழும் ரஜதம அதிர்வலைகளும் படிப்படியாக அதிகரிக்கிறது. சந்திரனின் இருள் மிகுந்த பகுதி அதிகரிப்பதுதான் இதன் காரணம். அதிகரிக்கும் ரஜதம தன்மையிலிருந்து பாதுகாப்பு பெற இக்கால கட்டத்தில் நம் ஆன்மீக பயிற்சியை அதிகரிப்பது நல்லது. வளர்பிறை காலத்திற்கு முந்தைய இரு வாரங்களில் அதிகரித்த முயற்சிகளை அப்படியே தக்க வைத்துக்கொள்ளவாவது முயல வேண்டும். இவ்வாறு செய்தால்தான் அடுத்த தேய்பிறை காலத்தில் ஆன்மீக பயிற்சியை அதிகரிக்க நாம் புது முயற்சிகளை மேற்கொள்வோம்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும் www.hindujagruti.org

தொடர்பு: 0938049626





ஆசிரியர், வெளியீட்டாளர்
**C.N.ராஜா**
செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**08825844033**




# சித்திரம் போன்ற இயற்கை சூழ்நிலைகளைப்

நாகரீகமான மனிதனும் பெண்ணும் நாம் எடைபோட்டு விரும்பும்படியாக இருப்பார்கள். காரணம் அவர்களிடம் சில சிறந்த கொள்கைகளும், நடைமுறைகளும் விரும்புகின்ற அளவு என்ற தன்மையைக் கொண்டது. இது அவர்களின் உயிருக்கும் பொருந்தும்.

❖❖❖

அன்புள்ள நண்பர்களே! நாடு விரும்புகின்ற எடைபோடும் படியான கொள்கை உங்களுடைய நடைமுறை வாழ்க்கையா அல்லது நீங்கள் செய்கின்ற தொழிலா, படிப்பா அல்லது நீங்களே அதிகமாக உங்கள் நாட்டிற்கு செய்ய இருக்கின்ற தன்மையா அல்லது உங்களுடன் வளர்ந்து வருகின்ற சமுதாயத்திற்கா? எது உங்களின் அளக்கும் தன்மையாகும்? இவை எல்லாமே எடைபோட்டு பார்த்து அளக்கின்ற தன்மையாகும்.

❖❖❖

ஒரு அழகான வரைபடத்தின் பெருமை கொண்ட மேம் பாடு உள்ள வேலைப் பாடு அந்த சித்திரத்தில் இல்லை. அதை தீட்டிய வண்ணச்சித்திரக்காரனின் கையில் இருக்கிறது. இங்கு சித்திரக் காரரின் எடைபோடும் விரும்பும் தன்மை அவன் வரைந்த அழகு சித்திரமே.

❖❖❖

சித்திரம் போன்ற இயற்கை சூழ்நிலைகளைப் பார்த்திருக் கிறீர்களா? இது இயற்கையின் உமிழும் எடைபோடும் தன்மை, இருந்தும் இத்தன்மை வளர்ச்சியுள் வைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய இயற்கை காட்சிகளும் அதன் அற்புத எடைபோடும் தன்மையும் நம்முடைய ரம்மியமான வாழ்க்கையுடன் சேர்ந்திருக்கின்றது.

❖❖❖

உன்னுடைய பிறர் விரும்பும்படியான எடைபோடும் தன்மை உன்னிடமும், உலகினிடமும் உள்ள உண்மையுடன் நல்விருப்பமுள்ள எடைபோடும் தன்மையையும் அதன் தொழில் திறமையையும் மனித னின் நம்பிக்கையையும் ஒருசேர எடுத்துக்கொண்டு செல்லுகிறது. சாதாரணமாக உலகில் நம்பிக்கை வந்துவிடாது. திடீரென்று வரு கின்ற மிகச்சாதாரணமான நம்பிக்கைக்கு உலகில் கொள்கை உள்ள திறமைத்தன்மையே கிடையாது. அதில் எந்தவிதமான தொழிலும் பிரதிபலிப்பதில்லை.

❖❖❖

உலகில் ஒரு மனிதனும் பெண்ணும் சொந்த திறமைத்தன்மை இல்லாமல் வாழ முடியாது. இதனால் உயிரின் தன்மை என்ற சொல் ஒவ்வொரு தனிமனிதனாலும் சர்ச்சிக்கப்பட கூடியதாக காணப்படுகிறது.

❖❖❖

சிறப்பிக்க கூடிய விருப்பம் என்பது மனித உயிரின் விருப்பத்தை எடுத்துக்காட்டுகின்ற கொள்கையாகும். இங்கே நான் உன்னுடைய எடுத்துக்காட்டக்கூடிய சிறப்புத்தன்மை எது என்று கேட்கவில்லை. ஆனால் நான் உனது காரணமான உயிரின் சிறப்புத்தன்மை என்ன என்பதையே



ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# சுத்தத்திற்கு தூதுவன் அசுத்தத்திற்கு எமன்

# முன்னோர் வாழ்வியல் முறையை கடைபிடியுங்கள்

# உலக மக்களை கண்காணிக்கும் கரோனா

உலக அளவில் நாகரீகம், விஞ்ஞானம் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருந்தாலும் அந்த வளர்ச்சிகள் அனைத்தும் நமது முன்னோர்களின் வளர்ச்சிக்கும் விஞ்ஞானத்திற்கும் ஒரு கடுகளவு கூட இருக்காது என்பதுதான் உண்மை.

2020ம் ஆண்டு வரக்கூடிய அமாவாசை, பௌர்ணமியை பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே கணித்தவர்கள்தான் நம் முன்னோர்கள், வானியல், கணிதவியல் போன்றவற்றில் அவர்கள் பெற்ற புலமையை இதுவரை உள்ள விஞ்ஞானங்கள் கூட பெற்றிருக்கவில்லை.

சித்த மருத்துவம் பல்வேறு பிரிவுகளில் பிரித்து சிதைந்து ஒவ்வொரு மாற்றுப் பெயரில் உலவினாலும், மருத்துவத்திற்கு தாய் வீடு நமது சித்த மருத்துவம்தான், இன்று மனித உடலில் உள்ள ஒவ்வொரு பாகத்திற்கும் அறுவை சிகிச்சை நடத்தப்படுவதை பெருமையாக நினைத்தாலும், பல ஆயிரம் வருடத்திற்கு முன்பே தலையில் உள்ள கபாலத்தை பிரித்து அறுவை சிகிச்சை செய்து சாதித்துள்ளனர் நமது சித்தர்கள்.

"சுத்தம் சுகம் தரும், சுகாதாரம் நாட்டைக் காக்கும்" என்பது நம் முன்னோர்களின் வாக்கு. நோயில்லா மக்களைக் கொண்ட நாடே வல்லரசாகும். ஒரு நாட்டின் ஆரோக்கியமே அந்நாட்டின் வளம். அதனால்தான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்கிறது பழமொழி.

செல்வங்களில் எல்லாம் முதன்மையான செல்வம் நோயற்ற வாழ்வுதான்.

கையில் உள்ள நாடியை பிடித்தே உடலில் இந்த நோய் உள்ளது என்பதை தீர்க்கமாக கண்டுபிடித்து, அவற்றை இலை, தழை, வேர், காய், கனி, விதை போன்ற இயற்கை பொருட்களைப் பயன்படுத்தியே அந்த நோய்களை விரட்டியுள்ளனர்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, இன்று கரோனா என்ற கண்ணிற்கு தெரியாத வைரஸ் கிருமிக்கான தீர்வை, நமது முன்னோர் வாழ்வியல் முறையில் வாழ்ந்தும், கடைபிடித்தும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்த்தியுள்ளனர்.

சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்துக் காட்டி, ஒரு மனிதன் எவ்வாறு சுத்தமாக வாழ வேண்டும் என்பதை நமது சந்ததிக்கு மிக அழகாக கூறியுள்ளனர் முன்னோர்.

ஆனால் காலபோக்கில் சோம்பேறித்தனம், முட்டாள்கள் + மூடர்களின் மூடச் சிந்தனைகளுக்கு ஆட்கொள்ளப்பட்டு, நமது முன்னோர் வழிமுறைகளை நாம் பின்பற்றாமல் விட்டதின் விளைவை 2020இல் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

கிராமப்புறங்களில் வாழ்ந்த வரை எந்த கொடிய நோயும், கிருமியும் மனித குலத்திற்கு எதிரியாக வில்லை, எப்போது கிராமங்களை நகரங்களாக மாற்றி, பணத்திற்கும் ஆடம்பரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க துவங்கினோமோ அன்றிலிருந்து மனித குலத்திற்கான அழிவு காலம் ஆரம்பமாகிவிட்டது.

மரங்களை மறந்து, மின்விசிறிக்கும், ஏசிக்கும் மாறியவுடன் நம் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களிடம் நம் உடலை கொடுத்துவிட்டோம்.



சத்தில்லா சுவையான நாகரீக உணவிற்கு நம் நாக்கை அடிமைப்படுத்தியவுடன், ஜீரணம், நெஞ்செறிச்சல், இதய கோளாறு, போன்றவற்றிற்கு நமது வயிற்றை இரையாக்கிவிட்டோம்.

இறை பக்தி, விரதமுறைகள், தெய்வத்தின் மீது நம்பிக்கை, தவறுசெய்யும் போது அச்சப்படுதல், போன்றவற்றை உதாசீனப்படுத்தி, நம் மனதை மாயா ஜாலங்களைப்போன்ற சுகபோகத்திற்கு அடிமைப்படுத்தியதிலிருந்து தீய சிந்தனை, சுயநலம் போன்றவற்றிற்கு நமது உயர் சிந்தனைகளை அடிமைப்படுத்திவிட்டோம்.

சுத்தமான உணவு, பழக்கவழக்கங்கள், அகச்சுத்தம், மனச்சுத்தம் போன்றவற்றை கடைப்பிடிப்பதை நிறுத்தி, நம் உடலை சோம்பேறித்தனத்திற்கு அடிமைப்படுத்திவிட்டோமோ அன்றிலிருந்து நாம் உடல் மற்றும் மனநோய், தன்னம்பிக்கையின்மை போன்றவற்றிற்கு நம்மை அடிமைப்படுத்தி விட்டோம்.

இவை அனைத்தும் நாம் விரும்பி ஏற்றது கிடையாது, அறிவாளிகளாக இருந்த மக்கள் மீது ஒருசிலரால் திணிக்கப்பட்டதாகும்.

ஆடம்பரம், சுகபோகம், பணம் சேமிப்பு போன்றவற்றின் பக்கம் மக்களை திருப்பிவிட்டு, மேன்மை மிகுந்த நமது கலாச்சாரத்தில், வாழ்வியல் முறை, இதிகாச புராணங்கள் போன்றவற்றில் இடைச்செறுகல்களை சத்தமில்லாமல் வெற்றிகரமாக செய்து வெற்றிபெற்றுள்ளனர் ஒருசில மேல்நாட்டு துரோகிகள்.

இதுபோன்ற மாற்றங்களால் இந்திய மக்கள் பலவற்றை இழந்திருந்தாலும், தற்போது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை முறையிலிருந்து விலகி நவ நாகரீகப் போர்வையில் சுத்தமின்றி அலைந்து திரிவதை பார்த்த இயற்கை தற்போது சுத்தத்திற்கு ஒரு பிரதிநிதியாக கரோனா வைரஸ் கிருமியை நியமித்துள்ளதாகவே தோன்றுகின்றது.

கரோனா கிருமி நம்மை அண்டாமல் தவிர்க்க அவசியம் உடலை சுத்தமாக வைத்திருப்பதும், சமூகத்துடனான உறவை தள்ளி வைத்தலுமே முக்கிய காரணமாகும்.

இதைத்தான் நம் முன்னோர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடைபிடித்தனர்.

வெளியே சென்று வந்தால் கைகால்களை கழுவினார்கள்,

வாசலில் கிருமி நாசினியாக பசுஞ்சாணம் போன்றவற்றை பயன்படுத்தினார்கள்,

வாசலில் வேப்பஇலை போன்ற இயற்கை கிருமி

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்



கொல்லிகளை பயன்படுத்தினர்.

ஒருவரை ஒருவர்தொட்டு, கைகுலுக்கியும், அனைத்தும் கொள்ளும் நடைமுறையை பயன்படுத்த மாட்டார்கள், அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் உடனே போய் குளித்துவிடுவார்கள். (இதை ஒரு மூடர் கூட்டம் ‘தீண்டாமை’ என்று திரித்து கூறினர்).

வெளியில் சாப்பிடுவதை தவிர்த்தனர், ஒரு வேளை பட்டினி கிடந்தாலும் வீட்டிற்கு வந்த பின்பே சாப்பிடுவார்கள்.

மற்றவர்களிடம் பேசும் போதும், பழகும் போதும் இடைவெளியை கடைபிடித்தனர்.

இறந்தவர் வீட்டில் குறிப்பிட்ட நாட்கள்வரை உணவருந்துவதை தவிர்த்தனர்.

உடலில் உள்ள செல்களுக்கு புத்துணர்ச்சி தர வாரத்திற்கு ஒருமுறை சூரிய ஒளியில் எண்ணை குளியல்.

சத்துள்ள காய்கறி உணவுகள், புரதச் சத்து மிக்க பால், தயிர் மோர் உணவுகள், விட்டமின் சத்துககள் நிறைந்த கீரை, எலுமிச்சை பழம் போன்றவற்றைப் பயன்படுத்திவந்தனர்.

வேப்பங்குச்சி, உப்பு, ஆலங்குச்சி, போன்றவற்றில் பல் துலக்குதல், எந்த செயலையும் செய்யும் முன் குளித்தல், ஊர் விஷேசங்களில் ஜன நெருக்கடி ஏற்பட்டு கிருமி வராமல் தடுக்க, மற்ற வெளியாட்கள் ஊருக்குள் வருவதையும், உள்ளூர்க்காரர்கள் வெளியூர் செல்வதையும் தடுத்து வீணான கிருமி தொல்லைகளில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள விஷேச நேரத்தில் காப்பு கட்டுதல் விஷேசம் முடியும் தருவாயில் கிருமி நாசினியான மஞ்சள் தண்ணீரை பீய்ச்சி அடித்து விளையாட்டு போட்டி போன்ற சட்டங்கள் வகுத்து செம்மையாக வாழ்ந்து வந்தனர்.

மேற்கண்ட அனைத்து செயல்களிலும் ஆன்மிகத்தை இணைத்து இறைவன் பெயரில் பயபக்தியுடன் கடைபிடித்து வந்த பழக்க வழக்கங்களாகும்.

இவற்றையெல்லாம் கேலியும் கிண்டலும் செய்துவந்த கூட்டத்தினர், விழிப்புடன் வாழ்ந்து வந்தவர்களை குழப்பி, சீர்திருத்தம் என்ற சுயநலத்தை மக்களிடம் புகுத்தி அவர்களை குழப்பி மாற்று மதக் கொள்கைகளை திணித்து, இந்து மக்களை முட்டாளாக்கி தங்கள் கைப்பாவையாக வைத்து காசு பணம் நகை பொருள் போன்றவற்றை பெருக்கி சுகபோகத்தை அனுபவிக்கின்றனர்.

இந்த மூடர்களின் பேச்சை கேட்டு முன்னோர் வாழ்க்கை முறையை மறந்த நமக்கு, இயற்கை தற்போது கரோனா என்ற கிருமி மூலம் மீண்டும் முன்னோர்களின் வழிமுறைகளை கடைபிடிக்க வைத்துள்ளது. நமது முன்னோர்கள் கடைபிடித்த பழக்க வழக்கங்களை உலகம் முழுக்க இருக்கும் மக்கள் கடைபிடிக்கும் உத்தரவையும் இயற்கை எழுதப்படாத சட்டமாக அறிவித்துள்ளது.

தற்போது உலக மக்கள் மட்டுமல்ல நம் முன்னோர் வாழ்க்கை முறையை கேலி கிண்டல் செய்த மூடர்களின் சந்ததியினர் கூட உயிர் பயத்தால் முன்னோர் வாழ்வியல் முறையை கடைபிடித்து வருகின்றனர்.

வெளியில் வந்தால் கரோனா தொற்று ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகின்றனர், மேற்கத்திய நாகரீகப்படி கைகுலுக்குவதை மறந்துவிட்டனர், கட்டியணைப்பதை வெறுக்க ஆரம்பித்துவிட்டனர், தொட்டுபேசினால் பயப்படுகின்றனர், வெளியே சென்று வந்தால் குளிக்கின்றனர், மேற்கத்திய உணவுகளான பீட்சா பர்கர் போன்றவற்றை தவிர்த்து, மிளகு ரசம், கீரை குழம்பு, காய்கறி பொறியல், தயிர், மோர், வெண்ணை போன்றவற்றை சாப்பிட ஆரம்பித்துவிட்டனர்,

தற்காலத்தில் மனிதன் வாழ்க்கையில் செம்மையுடன் சுத்தமாக வாழ்ந்தால் கரோனா நம்மை தொற்றாது, ஆனால் சுத்தத்தை மறந்தால் கரோனா நமது உயிரைக்கூட பறித்துவிடும். தற்போது மனித குலம் பிழைக்க ஒரே வழிமுறைதான் உள்ளது. அனைவரும் நம் முன்னோர் வாழ்வியல் முறையையும், உணவு முறையையும் கடைபிடித்து இயற்கையுடன் ஒன்றி வாழ்வோம், கரோனா கிருமி நம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறது.

– ஸ்ரீபதி, மயிலாடுதுறை





அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு,
நாளிதழ்கள், போன்றவை தரமாகவும்
குறைந்த செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

# உலகில் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள் இந்துக்கள் மட்டுமே

இந்தியாவில் தற்போது பரம்பரை பரம்பரையாக இந்துமதத்திலிருந்து வழுவாமல், இந்து மத வழிபாட்டு முறைகளை தவறாமல் கடைபிடித்து வாழும் ஒவ்வொரு இந்து குடும்பங்களும் மிகப்பெரிய தியாகங்கள் செய்துள்ளனர், இந்த தியாகத்துடன்தான் இந்துமதத்தை பின்பற்றி வாழ்ந்து சாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்நிய மத படையெடுப்பு மூலம் இந்திய மக்களை அடிமைப்படுத்தி அவர்களின் மதத்திற்கு மாற்றி கொடுமை படுத்தியது, அப்படி மாற முடியாது என்று கூறினால், மறுப்பவரின் உடல் உறுப்புகளை சேதப்படுத்துதல், சொத்தை அபகரித்தல், பெண்களை அடிமைப்படுத்தி தவறாக பயன்படுத்துதல், சிறைச்சேதம், அன்ன ஆகாரம் கொடுக்காமல் பட்டினிபோடுதல், யானையின் கால்களில் கட்டிப்போட்டு யானையை நடக்கவிடுதல் மூலம் உடல் நசுங்கி இறப்பது போன்ற கொடிய தண்டனைகள் கொடுத்து அச்சுறுத்துவது போன்ற கொடிய செயல்களையெல்லாம் தாங்கிக் கொண்டாலும், இன்னும் தன் மதத்தின் கடவுளை தவிர மற்ற மதத்தின் பக்கம் திரும்பி பார்க்காத ஒவ்வொரு இந்துக் குடும்பத்தின் முன்னோர்கள் மிகப்பெரிய தியாக வாழ்க்கை வாழ்ந்தவர்கள்.

மக்களின் இயலாமையை பயன்படுத்தி மாற்று மதத்தை உயர்வாக பேசி, இந்து மக்களையும் இந்து கடவுள்களையும் கேலி கிண்டலும் செய்து, தங்கள் மதங்களில்மாற்ற துடித்துக் கொண்டிருக்கும் நயவஞ்சகர்களின் இனிப்பு பேச்சை புறக்கணித்தும்,

மிரட்டல் மூலம் மதம் மாறவைக்கத் துடிக்கும் கூட்டத்தினரை கண்டு அஞ்சாமல் இன்றும் இந்துக்களாக வாழும் நம் இந்து மக்கள்தான் உலகில் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள்.

இனிவரும் காலங்களில் நம் முன்னோர் வழியில் நாமும் மற்றவர் மதத்தின் பிடியில் சிக்கி சீரழியாமல் நம் மதத்தின் பெருமையை அவர்களுக்கு உணர்த்தி, நம் மதத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களையும் நம் மதத்திற்கு திருப்பி அழைத்துவர முயற்சிப்போம்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# 90 வது இதழ்

# அற்புதமான ஆன்மிக தகவல் தரும் உலகின் முதல் இலவச இணைய இதழ்










## அதிகப்படியான வாசகர்களுடன் தொடர்ந்து முன்னிலைக்கு சென்று கொண்டிருக்கும்

நமது aanmeegamalar.com இணையதளத்திலிருந்து வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கு

தொடர்ந்து ஆதரவு தரும் வாசகர்களுக்கு

# நன்றி... நன்றி... நன்றி....



கரோனா நமக்கு வரக்கூடாது என்று
ஒவ்வொருவரும் சுயநலத்துடன்
நம்மை நாமே
பாதுகாத்துக்கொள்வோம்....
இப்போதைய நம் சுயநலமே
மற்றவருக்கும் நோய் தொற்று
ஏற்படாமல் தடுக்கும்
பொதுநலனாகும்...

**கரோனா என்ற அசுரனிடமிருந்து ஒதுங்கியும், தனித்தும் இருப்போம்**